# ஓரிஸா அகதிகள் முகாமிலிருந்து தப்பியோடிய 800 பேரும் இராணுவத்திடம் பிடிபட்டனர்!

விலை ரூபா 3-00

# ஈழநாடு

THE EELANADU
'NATIONAL' TAMIL DAILY

மலர்: 32 பங்குனி: 11 ஷஃபான் பிறை: 26 இதழ்: 40
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 24-03-1990

(கொழும்பு)

ஓரிஸாவில் கோராபுட் அகதிகள முகாமிலிருந்து தப்பியோடிய இலங்கை தமிழ் குழுவினர் 800பேரும் இராணுவத்திடம் பிடிபட்டு மீண்டும் அகதிகள் முகாமில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இத்தகவலை பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேயரத்ன பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார். இதுபற்றிமேலும் தெரியவருவதாவது:

கடந்த வாரம் இம்முகாமிலிருந்து 800 பேர் தப்பியோடினர் இவர்களில் 15பேர் சில

(8ம் பக்கம் பார்க்க)

விமானங்கள் இருந்திருப்பின்

## உணவுப் பொட்டலங்கள் போட்டிருப்போம்!

ரஞ்சன்

(கொழும்பு)

''இலங்கையிடம் போக்குவரத்து விமானங்கள் இல்லை. இருந்திருந்தால், வடக்கு-கிழக்கிலிருந்து தப்பி ஓடியவர்களுக்கு அங்கு உணவுப் பொதிகளைப் போட்டிருக்கமுடியும்'' என்று அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்ன, சுதந்திரக்

(8-ம் பக்கம் பார்க்க)

★ சமூக-பொருளாதார மறுமலர்ச்சி ★ மரபுவழி கலாசாரம் ★ புரட்சிகர கல்வித்திட்டம் ★ தமிழ்-முஸ்லிம் மக்கள்நல்லுறவு

# விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பத்து அம்சத்திட்டம்!

(நமது ஒட்டுசுட்டான் நிருபர்)

**தமிழீழ விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி, 10 அம்சத் திட்டம் ஒன்றை உடனடியாக அமுல் நடத்த உத்தேசித்துள்ளது.**

**தமிழ்ப் பகுதிகளில், கடந்த சில வருடங்களாக ஏற்பட்டுவந்த சமூக பொருளாதார அழிவுகளை இனங்கண்டு, அவற்றை மீண்டும் கட்டியெழுப்பி அதன் மூலம் நல்லதொரு எதிர்காலத்தை அமைத்துக் கொடுக்கும் விதமாகவே இந்த 10 அம்சத் திட்டம் தயாரிக்கப்பட்டிருப்பதாக அறியவருகிறது.**

தமிழீழ விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியின் மத்திய நிர்வாகக் குழு அண்மையில் கூடியபொழுது, இந்த 10 அம்சத்திட்டத்தில் காணப்படும் 10 விடயங்கள் குறித்தும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

சம்பந்தப்பட்ட திட்டத்தில் இனம் காணப்பட்டுள்ள பத்து அம்சங்களும் வருமாறு;

(1) ''பொருளாதார, சமூக பாதிப்பிற்குள்ளான மக்களின் நல்வாழ்விற்கு வழியமைத்துக் கொடுத்தல்.

(2) ஏழை விவசாயிகள், தொழிலாளிகள், கடற்றொழிலாளர்கள் ஆகியோரின் நலன்களைப் பேணிக்காக்கும் வகையில் சங்கங்களை அமைத்து,

(8ம் பக்கம் பார்க்க)

இணைப்பு அதிகாரியாக தேவநேசன் நேசையா

(திருகோணமலை)

வடக்கு-கிழக்கு மாகாண அரசுக்கும், மத்திய அரசுக்குமிடையிலான இணைப்பதிகாரி

(8-ம் பக்கம் பார்க்க)

சிங்கள அகதிகள்:

## மீளக்குடியேற்றம் பற்றி புலிகள்-அதிகாரிகள் பேச்சு

(திருமலை)

திருமலை மாவட்டத்தில் இடம்பெயர்ந்த சிங்கள அகதிகளை மீளக் குடியமர்த்துவது தொடர்பாக விடுதலைப் புலிகள் முக்கியஸ்தர்களுடன் அரசு அதிகாரிகள் பேச்சுக்களை மேற்கொண்டுள்ளனர்.

கடந்த காலங்களில் இடம்பெற்ற பல சம்பவங்களால் இடம்பெயர்ந்த சிங்களக் குடும்பங்கள் தற்போது திருமலை 'பிரட்றி'க் கோட்டை

(8ம் பக்கம் பார்க்க)

## மலேசியாவிற்கு வேலைதேடிச் சென்ற இலங்கையர் நிர்க்கதி நிலையில்

(கோலாலம்பூர்)

வேலைதேடிமலேசியா சென்ற நூற்றுக்கணக்கான இலங்கையர்கள் நிர்க்கதிக்குள்ளாக்கப்பட்டுள்ளார்கள் என்று மலேசியாவிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயம் அறிவித்துள்ளது.

இவர்களில் பலர் உயர்ஸ்தானிகராலய வளவில் கடவுச்

(8ம் பக்சம் பார்க்க)

## திருமலையிலிருந்து எஞ்சிய இந்திய வீரர்கள் இன்று தாயகம் பயணம்

(திருகோணமலை)

திருகோணமலையில் இருந்து எஞ்சிய இந்திய அமைதிப் படை வீரர்கள் அனைவரும் இன்று காலை 9-00 மணியளவில் இந்தியா திரும்பவுள்ளனர்.

தற்போது திருமலையில் சுமார் 2500க்கு மேற்பட்டஇந்திய வீரர்கள் இருப்பதாகத் தெரியவருகிறது.

இன்று இவர்கள் அனைவரும் திருமலை சீனன்குடாவிலிருந்து இந்தியா திரும்புவார்கள்.

இந்திய வீரர்களுக்கு இன்று நடைபெறும் பிரியாவிடை வைபவத்தில், வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரும்,

(8ம் பக்கம் பார்க்க)

## பாராளுமன்ற கூட்டத்தொடர் ஒத்திவைக்கப்பட்டது

(கொழும்பு)

தற்போதைய பாராளுமன்றக் கூட்டத்தொடர் நேற்று நள்ளிரவுடன் ஒத்திவைக்கப்பட்டது.

ஜனாதிபதி திரு ஆர்.பிரேமதாஸா பாராளுமன்ற புதிய கூட்டத்தொடரை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 4ம் திகதி ஆரம்பித்துவைப்பார்.

ஆசிரியர்களின்

## மாகாண இடமாற்றங்கள் இடைநிறுத்தம்

(திருகோணமலை)

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் கடமையாற்றும் ஆசிரியர்களின் மாகாண இடமாறறங்கள்யாவும் இடைநிறுத்திவைக்கப்பட்டுள்ளன.

சம்பந்தப்பட்ட இடமாற்றம் குறித்து ஆராயவதறகு வடக்குகிழக்கு மாகாண அரசின் கல்வி அமைச்சின் பதில் செயலாளர் திரு. ஜே. சற்குணராஜா தமையில் இடமாற்றச்சபை ஒன்று நியமிக்கப்பட்டிருக்கிறது.

இந்தச் சபையின் செயலாள

(8ம் பக்கம் பார்க்க)

## காஷ்மீர் பிரச்சனையில் தலையிட எவருக்கும் உரிமையில்லை

வி. பி. சிங்

(புதுடில்லி)

''காஷ்மீர் விவகாரம் எமது உள்நாட்டுபிரச்சனை இதல்தலையிடுவதற்கு வேறு எவருக்கும் உரிமை கிடையாது. இதில் இருதரப்பு நாடுகளின் பேச்சுவார்த்தைக்கு இடமேயில்லை பேச்சுவார்த்தை நடாத்துவதாயின் எமது காஷ்மீர் மக்களுடன் தான் பேசவேண்டும்.''

(8ம் பக்கம் பார்க்க)

வடக்கு-கிழக்கு

## கல்விப் பணிப்பாளர்களுக்கு திருமலையில் மாநாடு

(நமது திருமலை நிருபர்)

வடக்கு-கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த கல்விப்பணிப்பாளர்களை திருகோணமலையில் எதிர்வரும் திங்கட்கிழமை

(8-ம் பக்கம் பார்க்க)

## ஒன்பது பதில் செயலாளர் நியமிக்கப்பட்டனர்

(திருகோணமலை)

வடக்கு - கிழக்கு மாகாண சபைக்கு ஒன்பது பதில் செயலாளர்களை ஆளுநர் ஜெனரல் நளின் செனவிரத்ன நியமித்துள்ளார்.

அவர்கள் விபரம் வருமாறு: கல்வி, கலாசார விளையாட்டுத் துறை அமைச்சு திரு.ஜே. சற்குணராஜ .

நிதி, சமூகசேவைகள் அமைச்சு: திரு. கே. சோமாஸ்கந்தர்.

புனர்வாழ்வு அமைச்சு: திரு. ஏ. கே. பத்மநாதன்.

(8-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

பூரண விளைத்திறனுடைய பம்பாய் வெங்காய, பீற்றூட், கோவா, விதைகள் விற்பனைக் குண்டு பிள்ளையார், 259, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி 3625)

### தேவை

ஒரு சிறிய குடும்பம் வசிப்பதற்காக வீடு ஒன்று வாடகைக்கோ அல்லது குத்தகைக்கோ தேவை. வீடு யாழ் நகர மையத்திலிருந்து ஒரு மைல் சுற்றுடலிலும், கண்ணியமான இடத்திலும, சகல வசதிகளுடனும் அமைந்திருத்தல் வேண்டும். வாடகை முற்பணம் அல்லது குத்தகை குறித்து நேரில் பேசிக்கொள்ளலாம். தொடர்பு; V. சபாரத்தினம், 213, கஸ்தூரியார் ரோட், யாழ்ப்பாணம். (சி-3638)

### இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

கந்தானை மத்திய மருந்தகத்தில் உதவி வைத்திய அதிகாரியாகப் பணியாற்றிய திரு. ஆறுமுகம் ஸ்ரீபத்மநாதன் உடுவில் அரசினர் வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

### தொழில் பங்காளர் தேவை

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் 45 வருடமாக இயங்கும் ஹாட்வெயர் (இரும்புப் பொருட்கள்) ஸ்தாபனத்திற்கு முதலீட்டுடன் முழுநேர பங்காளர் தேவை. விபரங்களுடன் எழுத்து மூலம் தொடர்பு கொள்ளவும்.

விளம்பர இல: C 3640,
C/o ஈழநாடு,
யாழ்ப்பாணம்.
(சி-3640)

**வியாபாரம் பெருக**
**விளம்பரம் செய்க**

## யாழ். செயலகத்தில் கடவுச்சீட்டு அலுவலகம் மீண்டும் திறக்கப்படுமா?

[மானிப்பாய்]

கடவுச்சீட்டு விண்ணப்பங்களை கையளிப்பதற்காக யாழ் செயலகத்திற்கு மக்கள் தினமும் வந்து ஏமாற்றமடைகின்றனர்.

யாழ் செயலகத்தில் கடந்த 82 ம் ஆண்டு செமடம்பர் மாதம் 15 ம் திகதி கடவுச்சீட்டு அலுலலகம் திறந்து வைக்கப்பட்டது.

மத்தியகிழக்கு நாடுகளுக்கு செல்வதற்கான கடவுச்சீட்டுக்கள் மாத்திரமே வழங்கப்பட்டு வந்தது.

நாட்டில் தலைதூக்கிய அசம்பாவிதங்களினால் 83 ம் ஆண்டு அக்டோபர் மாதத்துடன் கடவுச்சீட்டு வழங்குவது இடைநிறுத்தப்பட்டது. இக்கால எல்லைகளுள் சுமார் இருபதினாயிரம் கடவுச் சீட்டுக்கள் யாழ்ப்பாண மக்களுக்கு இவ் வலுவலகத்தினால் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இதன்பின்னர் இக்காரியாலயத்தில் கடவுச்சீட்டு விண்ணப்பங்கள் மாத்திரமே கையேற்கப்பட்டு, கொழும்புக்கு அனுப்பிவைக்கப்பட்டன.

87-ம் ஆண்டு பிற்பகுதியில் இடம்பெற்ற வன்செயல் காரணமாக மூடப்பட்ட இக்காரியாலயம் ... தற்போது சுமுகநிலை தோன்றியும் இது வரையும் மீண்டும் திறக்கப்படவில்லை.

இக்காரியாலயத்தை மீண்டும் திறக்க ஆவன செய்யுமாறு யாழ் மாவட்டத்திலுள்ள பல்வேறு பொது ஸ்தாபனங்களும் மக்களும் குடிவரவு குடியகல்வு திணைக்களத்துக்கு கோரிக்கை விடுத்துள்ளனர். [71]

## அச்சுவேலி - கொழும்பு தினசரி பஸ் சேவை

[அச்சுவேலி]

அச்சுவேலியிலிருந்து வடமராட்சி ஊடாக தினசரி கொழும்பு பஸ்சேவையை வடபிராந்திய போக்குவரத்துச் சபை நடத்துகின்றது.

தினசரி மாலை 6.30 மணிக்கு அச்சுவேலி பஸ் நிலையத்திலிருந்து புறப்படும் கொழும்பிற்கான சொகுசு பஸ், உடுப்பிட்டி வல்வெட்டித்துறை, பருத்தித்துறை. கொடிகாமம் வழியாக கொழும்பு சென்றடைகிறது. [74]

## இரணைமடு குளத்திட்டம் மூலம் 4,500 ஏக்கர் நிலத்தில் சிறுபோக வேளாண்மை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் இரணைமடுக்குளத்திட்டத்தின் மூலம் 4, 560 ஏக்கர் நிலப் பரப்பில் சிறுபோக வேளாண்மை மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் கடந்த வருடம் சிறுபோகவேளாண்மைக்கு நீர் வழங்காத பகுதிகளில சிறுபோக நெற்செய்கைக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இரணமடுக்குளத்திட்டத்தின் மூலம் சிறுபோக வேளாண்மைக்கு நீர் வழங்கல் தொடர்பான கூட்டம், மேலதிக அரசாங்க அதிபர் (காணி) திரு. கே. குணராசா தலைமையில் கிளிநொச்சியில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் நீர்ப்பாசன அதிகாரிகள், விவசாயப்பகுதியினர், காணித் திணைக்களத்தினர், விவசாயிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இரணமடுக் குளத்திட்டத்தின் கீழ் ஆறுயிரம் கமச்செய்கை பங்கீட்டாளர்கள் உள்ளனர். இவர்களில் ஒரு ஏக்கர் நிலப்பரப்பிற்கு உட்பட்ட காணிக்கு அரைஏக்கர்ப் படியும், ஒரு ஏக்கருக்குக் கூடிய காணிக்கு முக்கால் ஏக்கரும் நெற்செய்கைக்கு ஒதுக்கப் படவும்; முதலாம், இரண்டாம், மூன்ரும், ஆரும், ஏழாம், எட்டாம், ஒன்பதாம், பத்தாம் வாய்க்கால்களுக்கு நன்னீர் வழங்கவும் முடிவாகியுள்ளது. (83)

### நாளை கூடுகிறது

(யாழ்ப்பாணம்)

அல்வாய் வேவிலந்தை ஸ்ரீமுத்துமாரி அம்மன்கோவில் மகாசபைக் கூட்டம் நாளை காலை ஆலய மண்டபத்தில் நடைபெறும்.

### பத்து மாணவர் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ் திருநெல்வேலி இந்து தமிழ்க்கலவன் பாடசாலையைச் சேர்ந்த பத்து மாணவர்கள் 1989ம் ஆண்டு புலமைப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் மாணவர்களின் பெயர்கள் வருமாறு; து. ஆதீசன், ச. மாறன். வ. குலத்துங்கன், யோ. தரணிதரன், இ. ஜெகன்தனபால், ந. தர்மராசா, கு. வெங்கடேஷ். இ. துஷ்யந்தினி, க.ரேணுகா, சி. பவதாரிணி.


## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



**கந்தசாமி ஜெகநாதன்**
[ஜெகன்]
(ராணி மில், செல்லம் மில் உரிமையாளர்)

அமரத்துவம் எய்திய எமது குடும்ப செல்வம் அமரர் கந்தசாமி ஜெகநாதன் [ஜெகன்[ அவர்களின் அந்தியேட்டிக் கிரியையும் வீட்டுக் கிரித்தியமும் எதிர்வரும்(1990-03-27) செவ்வாய்க்கிழமைகாலை 7-00மணியளவில் இடம்பெறும். தொடர்ந்து பிரார்த்தனையும் நடைபெறும். உற்ரூர், உறவினர், நண்பர்கள் அனைவரையும் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிராத்திக்குமாறு அன்புடன் வேண்டுகிரேம்.

குடும்பத்தினர்.

நெல்லியடி, கரவெட்டி. (சி-3642)

## சென்றல்-சென். ஜோன்ஸ் BIG MATCH

OLD PARK CHINESE RESTAURANT

### ரசிகர்களுக்கு ஓர் நற்செய்தி

உங்களின் வசதிகருதி OLD PARK CHINESE RESTAURANT தனது விசேட விற்பனைச் சாலையை கிரிக்கெற் மைதானத்துக்கண்மையில் இரண்டு நாட்களுக்கு திறந்திருப்பார்கள்

அங்கு மதிய உணவுவகைகள், சிற்றுண்டி வகைகள், குளிர்பான வகைகள் பெற்றுக்கொள்ளலாம். விசேட ஓடர்கள் முன்கூட்டியே ஏற்றுக்கொள்ளப்படும்,

அதிசிறந்த உணவுவகைகளும், சிற்றுண்டி வகைகளும் OLD PARK CHINESE RESTAURANT இல் காலை 10.00 மணி தொடக்கம் இரவு 10.00 மணிவரை கிழமையில் எல்லா நாட்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

# OLD PARK CHINESE RESTAURANT

207, Old Park Road, Jaffna.
(C-628)

## TENDER FOR UNINTERUPTED POWER SUPPLY SYSTEM

Seald TENDERS, along with detailed technical specifications and particulars of operational conditions and facilites of after sales service, are invited for the supply of uniterupted power supply system.

The specifications are given below;

| | | |
|---|---|---|
| Power Source | : | Single phase - 50 Hertz |
| Rating | : | Continuous 1.5/3.0/5.0/10.0 KVA at 240V, Sine wave. |
| Cut off Levels | : | 200V (Lower) &250(Upper) |
| Operations | : | Normal A. C/Battery D.C/By-Pass. |
| Back up time | : | Not less than 10 minutes at full load and 30 minutes at 50% load preference will be given for higher back up time. |
| Indications | : | Distinctive Audio (Buzzer Aarm) and visual indications in case of malfunction/cutt-of stages/Commercial power failure. Audio visual indications for input/output and battery charging/Discharging. |
| Additional | : | Quotation shall detail Installation's. |
| Requirements | : | Enviremental conditions/Physical Characteristics/Circuit Diagrams/External Connectors/Voltage and Frequency Regulations/Type of cooling. |
| Accessories | : | Batteries, Basic SERVICE Tools. |

Please send your seald TENDERS in quadruplicate on or before 2 00 p. m. on 06-04-1990 to THE BURSAR, University of Jaffna, Jaffna. Please indicate the reference No. S/C/U/UPS/01/1990 on the left hand of the envelope. Tenders will be opened on the same day at 2-30 p. m.

(A-633) Registrar.

# லிதுவேனிய பொலிஸ் படை உருவாகிறது

# அதிபர் கொர்பச்சேவின் உத்தரவு நிராகரிப்பு

## சோவியத்தில் நெருக்கடி

### ஆயுத ஒப்படைப்பிற்கு அலட்சியம்

[மாஸ்கோ]

லிதுவேனியாக் குடியரசின் பாதுகாப்புக் கருதி புதிய பொலிஸ் படை ஒன்று அமைக்க அதிபர் திரு. பெர்கிஸ் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார். மேலும் லிதுவேனியர்கள் அடுத்த ஆறு நாட்களுக்குள் சகல ஆயுதங்களையும் ஒப்படைக்க வேண்டுமென்ற திரு. கொர்பச்சேவின் உத்தரவையும் நிராகரித்துள்ளார்.

சோவியத் யூனியனின் மாநிலங்களில் ஒன்ருன 'லிதுவேனியா' அண்மையில் ஒரு தலைப்பட்சமாக சுதந்திர குடியரசு பிரகடனம் செய்திருந்தது. இதையடுத்து சோவியத் யூனியனில் பெரும் நெருக்கடி நிலை தோன்றியுள்ளதுடன் இம்மாநிலம் ஜனதிபதி ஆட்சியன்கீழ் கொண்டுவரபபட்டுள்ளது..

லிதுவேனிய குடியரசின் எதிர்கால நலனை முன்னிட்டு பொலிஸ்பிரிவு அமைக்கப்பட்டுள்ளதாகவும் இக் குடியரசின் பாதுகாப்பில் சோவியத் யூனியன் எவ்விதத்திலும் தலையிட அனுமதிககப்படமாட்டாதென்றும் அதிபர் திரு. பெர்கிஸ் தெரிவித்துள்ளார்.

மேலும் லிதுவேனிய குடியரசிற்கு ஆதரவான ஆயுதக் குழுக்கள் ஜனதிபதி திரு. கொர்பச்சேவின் ஆயுத ஒப்படைப்பு கோரிக்கையை அலட்சியம் செய்துள்ளன இதன்மூலம் இம்மாநிலத்தில் மேலும் வன்முறைகள் வெடிக்கும் ஆபத்தும் அதிகரித்துள்ளன.

இப் பிரச்சனையை சுமுகமான முறையில் தீர்க்குமாறும் இராணுவ நடவடிக்கையை கைவிடுமாறும் அமெரிக்கா சோவியத் யூனியனை கேட்டுள்ளது. [சி]

## மாணவியரின் வாய்த்தர்க்கம் ஐவர் பலி!

(கராச்சி)

பாடசாலை மாணவியரிடையே ஏற்பட்ட 'வாய்த்தர்க்கம்' ஐந்துபேரை உயிரிழக்கச் செய்த சம்பவம் ஒன்று பாகிஸ்தானில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

கராச்சியில் உயர்நிலை மகளிர் பாடசாலையில் இரு சமூகத்தைச் சேர்ந்த மாணவியர் இருவரிடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டது. இது பின் அவர்களது சமூகச் சண்டையாகவே மாறிவிட்டது.

இச் சண்டையில் ஐந்துபேர் வரை சுட்டுக்கொல்லப்பட்டனர். இருபத்தைந் பேருக்குமேல் படுகாயமடைந்தனர். இதையடுத்து சம்பவம் பற்றி கேள்விப்பட்ட பொலிசார் உடன் அங்கு விரைந்து வந்து கலவரம் மேலும் பரவாமல் தடுத்ததுடன் பலரைக் கைது செய்துள்ளனர். (சி)

## தொழில் தூண்டல் பயிற்சி வகுப்பு

(யாழ்ப்பாணம்)

உடுவில், கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் நியமனம் பெற்ற பயிலுநர் ஆசிரியர்களுக்கான தொழில் தூணடல் பயிற்சி வகுப்பு ்ம் மாதம் 26-ம் திகதி திங்கட்கிழமை யாழ். உடுவில் மகளிர் கல்லூரியில் நடைபெறும். முன்னர் அறிவிக்கப்பட்டபடி சுன்னுகம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறமாட்டாது.

## குஜராத்தில் கள்ளச்சாராயம் அருந்திய 25 பேர் பலி;

### பலர் பார்வை இழப்பு

(புதுடில்லி)

குஜராத் மாநிலத்தில் கள்ளச்சாராயம் அருந்தியவர்களில் 25 பேர் பலியாகியுள்ளனர்; எண்பது பேர் வரை மோசமான நிலையில் ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். பலர் தமது கண்பார்வையை இழந்துள்ளனர்.

கள்ளச்சாராயம் விற்பனை செய்யும் கடையொன்றில், சாராயம் அருந்திய சிலநிமிட நேரத்திலேயே 17 பேர் சுருண்டு விழுந்து பலியாகினர். எட்டுப்பேர் ஆஸ்பத்திரியில் பலியாகினர்கள்.

மேலும் எண்பது பேர் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட நிலையில் ஆஸ்பத்திகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் பலர் பார்வையை இழந்துள்ளதாகவும் மீண்டும் இவர்கள் பார்வை பெறமுடியாது போய்விட்டதாகவும் டாக்டர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவத்தையடுத்து அக்கடையை உடனடியாக பொலிஸார் மூடியதுடன் சாராய விற்பனையில் ஈடுபட்ட மூவரையும் கைது செய்துள்ளனர். மேலும் பல பகுதிகளிலும் கள்ளக்சாராய விற்பனையாளர்கள் பலர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். [சி]

## விடுதலைப் புலிகளின் புகழ்

# 'மரணித்தபோராளிகள்மூலம் உலகின் கவனத்தை ஈர்த்தது'

(நெல்லியடி)

''தமிழீழவிடுதலைப் போராட்டத்தில் வீரமரணமடைந்த வீரமறவர்களின் மரணங்கள் சாதாரணமானதல்ல. இவர்களின் வீரத்தால் தான் தெற்காசியப் பிராந்தியத்திலே வலிமை பொருந்திய நாடெனக் குறிப்பிடப்படும் இந்தியாவை வெற்றிகொள்ள முடிந்ததோடு உலக நாடுகளின் அறிஞர்கள், அரசியல் அவதானிகளின் கவனத்தை எம்பக்கம் ஈர்க்க முடிந்தது. அவர்களால் எமது அமைப்பு இராணுவ ரீதியிலும் அரசியல் இராஜ தந்திரங்களிலும் சிறப்புடையதெனவும் போற்றப்பட்டது.

இவ்வாறு அல்வாய் கிழக்கு தில்லையம்பலப்பிள்ளையார் ஆலய முன்றலில் நடைபெற்ற லெப்டினன்ட் பவான் இளம் புலிகள் ருேசான், கரி ஆகியோரின் முதலாண்டு நினைவஞ்சலிக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய வடமராட்சி மக்கள் முன்னணிப் பொறுப்பாளர் திரு தீபன் குறிப்பிட்டார்.

திரு. தரிசனம் தலைமையில் நடைபெற்ற மேற்படி அஞ்சலிக் கூட்டத்தில் திரு. தீபன் தொடர்ந்து பேசுகையில்:

தமிழீழவிடுதலைப் போராட்டத்தில் இதுவரை 1,354 விடுதலைப்புலிகளும்-8000க்கு மேற்பட்ட பொதுமக்களும் மரணமடைந்துள்ளனர். இவர்கள் அனைவரும் தமிழீழம் என்ற கொள்கையையே கருத்தில் கொண்டனர் எனவே இவர்களின் எண்ணங்கள், எதிர் பார்ப்புக்களை நிறைவேற்ற நாம் தொடர்ந்தும் முன்வர வேண்டும்.

அன்னிய சக்திகள் எமது மண்ணில் அடியெடுத்து வைத்ததைத் தொடர்ந்து எமது கலை, கலாசாரங்கள் சீரழிக்கப்பட்டன. அவற்றுக்கு புத்துயிர் கொடுப்பது எங்கள் ஒவ்வொருவரினதும் கடமை. எனவேதான் அண்மைக்கால போராட்ட வரலாறுகளைச் சித்தரிக்கும் படைப்புகளுக்கு நாம் ஒத்தாசை வழங்கி வருகின்றேம்''. என்றார்.

தமிழீழவிடுதலைப் புலிகளின் வடமராட்சிப் பிரதேசப் பொறுப்பாளர் திரு சூசை பேசுகையில்: இலங்கை அரசாங்கம் கடந்த காலங்களில் எங்களுக்கு எதிராக போரைப் பிரகடனப்படுத்தி எங்களை அழிக்க கங்கணம் கட்டி நின்றது. ஆனல் தற்பொழுது எமது வீரத்தைப் புரிந்து கொண்ட நிலையில் எம்மை பேச்சுவார்த்தைக்கு அழைத்திருந்தது. நாமும் பலம் பொருந்திய நிலையிலேயே பேச்சுவார்த்தைக்குச் சென்றிருக்கின்றேம் இந்தப் பலத்தை ஏற்படுத்தியவர்கள் வீரமரணமடைந்த விடுதலைப் புலிகள் என்றல் மிகையாகாது. நாம் ஒவ்வொருவரும் இவர்களது இலட்சியததையடைய ஒத்துழைப்பு நல்க வேண்டும்'' என்றார்.

இவ்வைபவத்தில் தமிழீழ விடுதலைப்போரை சித்தரித்துக்காட்டும் 'பாப்பாக்கள் பிரகடனம்' 'இந்தியா மைலாய்' 'மண்ணின் மந்தர்கள்' முதலான கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. (55)

## "போராளிகள் குழுக்கள் வன்முறையில்ஈடுபட தமிழக அரசு இடமளிக்கமாட்டாது"

### - முதல்வர் கருணநிதி

(சென்னை)

தமிழ்நாட்டில் இலங்கைப் போராளிகள் குழுவைச் சேர்ந்த எந்தப் பிரிவும் வன்முறையில் ஈடுபட மாநில அரசு இடமளிக்க மாட்டாது. என்று முதல்வர் மு. கருணநிதி மீண்டும் தெரிவித்துள்ளார்.

இராமநாதபுரத்தில் மண்டபம் வீதியில் கடந்த மாதம் இடம்பெற்ற போராளிகளின் துப்பாக்கிச் சூட்டுச்சம்பவத்தினல் ஏற்பட்ட நிலைமை குறித்த ஒத்திவைப்பு தீர்மானம் ஒன்றிற்கு நேற்று சட்டப் பேரவையில் விளக்கமளிக்கையிலே அவர் இவ்வாறு கூறினர்.

தமிழ்ப் போராளிகள் தமிழகத்தில் ஆயுதங்களுடன் நடமாடவோ முகாம் அமைத்து பயிற்சி பெறவோ அனுமதிக்கப்படமாட்டாது. என்றும் இதுதொடர்பாக வழக்குப் பதியப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினர்.

## ‘ஈழநாடு’

### வார மலர்

25 - 03 - 1990

- யாகுண்டம் (தொடர் நவீனம்)
- பார்வை (சிறுகதை)
- ரினிட்டாட் தீவில் 8 வருடங்கள்
- தொல்லியற் சின்னங்கள்
- ஞாயிறு மஞ்சரி
- மாணவர் மன்றம்
- மங்கையர் மஞ்சரி

மற்றும்

வழக்கமான அம்சங்கள்

பக்கங்கள் - 12

விலை ரூபா 3/-

## சிறைச்சாலையில் கொடுமை: அதிகாரிகள் வேலை நீக்கம்!

[கேப்ரவுண்]

தென்னுபிரிக்க சிறைகளில் கறுப்பினத்தவர்களுக்கு எதிரான பல மோசமான நடவடிக்கைகளில் ஈடுபட்டதற்கான குற்றச்சாட்டின் பேரில் நாற்பது பொலிஸாரும் அறுபது சிறைச்சாலை அதிகாரிகளும் வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்

தென்னுபிரிக்காவின் பல பகுதிகளிலுமுள்ள சிறைச்சாலைகளில் கடந்த பல வருடங்களாக மேற்படி வேலைநீக்கம் செய்யப்பட்டோர் கறுப்பினத்தவர்களுக்கு எதிராக மனித உரிமை மீறல் நடவடிக்கைகளில் மோசமாக ஈடுபட்டிருந்தமை பல சாட்சியங்கள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து இவர்கள் வேலைநீக்கம் செய்யப்பட்டதுடன் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர். இவர்களது குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படும் பட்சத்தில் கடுமையான தண்டனை வழங்கப்படும் என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்தவருட பிற்பகுதியில் தென்னுபிரிக்க அதிபராக பதவியேற்ற திரு டபிள்யூ டி கிளார்க் அங்கு அமைதியும் சமாதானமும் தோன்றும் பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. [சி]

**மணிவாக்கு**

ஏழைபோல் வாழ், செல்வத்தில் பெருமை கொள்ளாதே. — மகாத்மாகாந்தி.

## நமது நோக்கு

## சீட்டுக் கிழிகிறது 'சிற்' (துண்டு) முறை!

நியமனங்கள் எல்லாம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

ஆங்கிலப் பழமொழிப்படி, 'ஆர்கியன் குதிரை லாயம்' (Arguan Stables) துப்பரவாக்கப்படுகின்றது.

வேலையில்லாப் பிரச்சனை உச்சநிலையை அடைந்துள்ள இந்த நாட்டிலே, தகுதியற்றவர்கள் எப்படியோ வேலைபெற்றுவிடுகிறார்கள். தகுதிபெற்றவர்கள் இதனால் அடையும் வேதனையும் விரக்தியும் அளப்பரியது.

இந்த நிலை ஏற்பட்ட காரணம் என்ன? ஆளும் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது கட்சியைச் சார்ந்தவர்களுக்கு வேலைபெற்றுத்தரத் 'துண்டு' கொடுத்து விடும் முறை நடைமுறையில் இருந்தது. இது பல ஊழல்களுக்கும் மனத்தாங்கல்களுக்கும் வழிவகுத்து வந்தது.

ஜனாதிபதி அவர்கள் 'துண்டு' கொடுக்கும் முறையை ஒழிக்க முன்வந்தது நாட்டுக்கு நல்ல சகுனம்.

அண்மையில் நடந்த அரசாங்கப் பாராளுமன்ற உறுப்பினர் கூட்டத்தில் இதுபற்றிப் பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன. இவை வரவேற்கப்பட வேண்டியவை.

அரசியல் தலையீடு, அரசியற் சட்டமூலமே தடுக்கப்படவேண்டுமென்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசியற் சட்டத்தின் 60வது பிரிவு, பகிரங்கசேவை ஆணைக்குழுவின் பணிகளில் தலையிடுவதை தடுக்கின்றது.

அந்த விதிக்கு என்ன நடந்தது? அந்த விதியின் 'ஓட்டை ஒடிசல்களை' அரசியல் வாதிகள் தமக்குச் சாதகமாக்கி, தமது ஆட்களை நியமிப்பதற்கு வழி வகுத்துவிட்டனர்; இதில் எல்லாக் கட்சியினருமே சம்பந்தப்பட்டிருந்தனர்.

இந்த விதியை மேலும் பலப்படுத்தவேண்டுமென அமைச்சர் ஹமீது வலியுறுத்தியுள்ளார்.

அரசியற் சட்டவிதிகளைப் பலப்படுத்தினால் அரசியல் தலையீடுகள் தண்டனைக்குரிய குற்றமாகிவிடும்.

''அரசியல் அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டால், அந்த அரசியல் வாதி அடுத்த தேர்தலில் போட்டியிடத் தடைசெய்யவும் சட்டம் வேண்டும்!'' — இது அமைச்சர் லலித்தின் அருமையான ஆலோசனை!

ஜனாதிபதி தமது உரையில், தென்னிலங்கையில் நடந்த வன்செயலிலிருந்து தகுந்த பாடம் படிக்க வேண்டுமென்பதை வலியுறுத்தியிருக்கிறார்; [illegible] வேதனைகளைப் பற்றிய ஆணைக்குழுவின் யோசனைகளை அமுல்படுத்தி வருகிறார். ஊழல், மோசடிகளைத் தவிர்க்க புதிய பாதை அமைக்கிறார்.

இதேவேளை, அரசியல்வாதிகளிடமிருந்து அதிகாரம் நிர்வாக இயந்திரத்திற்குச் செல்லும்போது கண்காணிப்பு மிக மிக அவசியம் 'எண்ணைச் சட்டியில் இருந்து நெருப்புக்குள்' போன கதையாக மாறக்கூடாது என்பதையும் வலியுறுத்த விரும்புகிறோம்!

## தவக்கால நற்சிந்தனை

### செபத்திலே தாழ்ச்சி

தனது சாயலாகப் படைக்கப்பட்ட மனிதன் தன்னோடு உறவுகொள்ள வேண்டுமென்பது இறைவனது விருப்பம். 'செபம்' என்பது நம்மிடமுள்ள இறைசக்தி ஆனது நமக்கு அப்பாற்பட்ட இறைசக்தியோடு நம்மைத் தொடர்புபடுத்துவது எனலாம்.

செபத்திலே பிறரைப் பழிப்பதோ, தன்னை உயர்த்துவதோ, பழிக்குப்பழி வாங்குவதோ, மன்னிக்க மறுப்பதோ அதன் நோக்கமாகாது. பரிசேயர் இதைத்தான் செய்தான். அவன் பிறரைப் பழிக்கின்றான் அதே வேளையில் தன்னையே உயர்த்திக் கொள்கிறான். (லூக் 18: 11-12) ஆயக்காரனின் செபம் உண்மைச் செபத்தின் குணங்கள் அனைத்தையும் கொண்டது. முதலில் ''கடவுளே'' என்று விளிப்பது அவனுடைய இயலாத் தன்மையைச் சுட்டுவதோடு, இறைவன்மீது அவன் கொண்ட ஆழ்ந்த நம்பிக்கையை எடுத்துக் காட்டுகின்றது. அடுத்து தான் ''பாவி'' யென்பதை இறைவனிடம் வெளிப்படுத்துகின்றான். இது அவனுடைய தாழ்ச்சியெ எடுத்துரைக்கின்றது.

எல்லா நன்மைக்கும், புனிதத் தன்மைக்கும் அடிப்படையான இறைவன்முன் 'நாம் பாவிகள்' என்பதை உணர்தல் செபத்தில் இனிமையான அம்சமாகும்.

இதைத்தான் நாமும் எமது செபத்தில் கொண்டிருக்க வேண்டும். முதலில் ஆயக்காரன் போன்று இறைவன் முன் எம் இயலாத்தன்மையை உணர்ந்து இறைவன் பால் முழு நம்பிக்கை கொண்டிருக்க வேண்டும். நாம் பாவிகள் என்பதை ஏற்று, இறைவன் எம்மில் மாற்றத்தைக் கொண்டுவர அவரோடு ஒத்துழைக்கவேண்டும்.

அருட்திரு A. F. பெனட்
மயிலிட்டி.

## பரீட்சைப் பூதமா? பயப்படாதீர்கள்!

# அதனோடு வாழும்வழி இதோ

இன்னும் சில தினங்களில் க. பொ. த. (சா/த) பரீட்சை நடைபெற இருக்கின்றது. தோற்றும் சில மாணக்கரின் முகங்களில் நெருக்கடி நிலையும் பயப்பீதியும் தென்படுகிறது.

எமது இன்றைய கல்வி முறையிலே பரீட்சைக்குக் கொடுத்திருக்கும் அழுத்தம் காரணமாக அது ஒரு பெரும் பூதமாகத் தென்படுகிறது; பலரைப் பெரும் வேதனைகளுக்கு உள்ளாக்குகின்றது; ஆளுமையைப் பாதிக்கின்றது.

கல்விமுறை மாறும் வரை அந்தப்பூதம் எம்மை விழுங்க விடாது, அதனோடு வாழும் முறைகளைச் சிந்திப்போம்!

பல வருடங்களாசப் படித்த பாடங்களைச் சில தினங்களில் விலைக்கு வாங்கவேண்டாம்!

நீண்டநேரம் கண்விழித்துப் படித்தது போதும். கடைசி நேரத்திற் புதிதாக எதனையும் படிப்பதில் எவ்வித பயனும் இல்லை. ஏற்கனவே படித்ததை விளங்கிக்கொண்டதை இது குழப்பியடித்து, மூளையைக் கலக்கியடித்து விடும். எனவே கூடியளவு ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள். ஓய்வெடுத்து பூரண உடல் நலத்தோடு பரீட்சை எழுதும்போது, கம்பியூட்டர் மாதிரி ஆண்டுகள் பலவற்றிற்கு முன் படித்ததும் நினைவுக்கு வரும். உடல் நலம் கெட்டு, குழம்பிய மூளையுடன் பரீட்சை எழுதுவோன் நினைவாற்றல் கெடுவதால், புள்ளிகள் பெறவாய்ப்பில்லை.

டம் தணிய அந்த நேரம் பயன்படட்டும்.

வினாக்களுக்கு விடை எழுதுமுன் கவனிக்கவேண்டியவை சில உண்டு அல்லவா? எத்தனை வினாக்களுக்கு விடை எழுத வேண்டும். பகுதிகள் என்ன என்பன போன்றவையையும் கவனமாக வாசியுங்கள்.

வினாக்களை ஒருமுறை மாத்திரம் வாசித்தாற் போதாது. மீண்டும் ஒருமுறை வாசியுங்கள். கர்ணனின் குணநலனை எழுதுக என்ற வினாவிற்கு கண்ணன் பற்றிப் பக்கம் பக்கமாக எழுதிவிட்டு, வெளியேவந்து 'அழுது வடியும்' மாணக்கரை நாம் அறியாமலில்லை.

கடைசிப் பத்து, நிமிடங்களிலும் புதிதாக எதையும் எழுதவேண்டாம். விடைகளை திரும்பிப் பார்ப்பதற்கும் சுட்டிலக்கம் வினாக்களின் எண்கள் விடைத்தாளின் பக்கங்கள் ஆகியன ஒழுங்காகஉள்ளனவா என்பதைக் கவனியுங்கள். எழுத்துப்பிழைகளைத் திருத்துங்கள்.

நேரத்தைவினாக்களின் எண்ணிக்கைக்கேற்ப, முதலிலேயே திட்டமிட்டு ஒதுக்குங்கள். நன்றாகத்தெரிந்த விடை என்பதற்காக ஒரு வினாவிற்கு அளவுக்கு அதிகமான நேரத்தை செலவிட்டுப் பின்னர் ஏனைய வினாக்களுக்கு நேரம்போதாது என்று கவலைப்படுவோருக்கு

(5ம் பக்கம் பார்க்க)

## மாணக்கர் மலர்ச்சிக்காக

சிலமணி நேரத்தில் எழுதும் விடைகளைக்கொண்டு கணிக்கப்போகிறார்கள்.

சுவர் இருந்தால்தான் சித்திரம் தீட்டலாம்; உடல்நலம் இருந்தால்தான் பரீட்சையைச் சிராக எழுதலாம். பரீட்சை அண்மித்து வரும் நாட்களில் உடல் நலம் காப்பதிற் கவனம் வேண்டும். மப்பும் மந்தாரமாகவும் உள்ள இந்த நாட்களில் நனைந்து விட்டு, தடிமனைக் காய்ச்சலை

### பெற்றோர் பங்கு

காய்ச்சல், தடிமன், வயிற்றுக்கோளாறு போன்ற சிறு பிணிகளைத் தீர்க்க உடன் வேண்டியதைச் செய்யுங்கள். குளிப்பு, முழுக்கு, ஓய்வு, நல்ல உணவு போன்றவற்றிற் கூடிய கவனம் செலுத்துங்கள். அணிந்து செல்லவேண்டிய ஆடைகளைத் தெரிவு செய்து ஒழுங்குபண்ணி வையுங்கள். இறுக்கமான ஆடைகளைத் தவிருங்கள்.

பேனா, அழிப்பதற்கான 'இறேசர்', பென்சில், நிறப் பென்சில்களை முன்கூட்டியே வாங்கி அவற்றை எடுத்துச் செல்வதற்கு உதவுங்கள். அறிமுக அட்டை, அனுமதிப்பத்திரம் ஆகியவற்றை பரீட்சை தினங்களில் எடுத்துச்செல்ல நினைவுபடுத்துங்கள். இது சின்ன விஷயம் என்று முணுமுணுப்பது கேட்கின்றது! அனுமதிப்பத்திரத்தையோ அறிமுக அட்டையையோ எடுத்துச்செல்லாது, பரீட்சை மண்டபத்தில் 'திருதிருவென'

- சிவா -

முழித்து, பயந்து, நடுங்கி, திரும்பி எடுத்துவரச் சென்று நேரம் பிந்தி வந்து மேற்பார்வையாளரின் கடுகடுப்புக்கு அஞ்சி...... அப்பப்பா— அன்றைய விடைகள் அவ்வளவு தான்!

### பரீட்சை மண்டபத்தில்

நேரத்திற்கே சென்று விடுங்கள், பதட்டம் அடையாது கலகலப்பாக இருங்கள். வினாபத்திரம் கிடைத்ததும், எதிர்பார்த்த வினாக்கள் வரவில்லையே என ஏங்காதீர்கள். படித்த வினாக்கள் உருமாறி வரும். பதட்டமில்லாமற் படித்தால் விடைகள் நினைவுக்கு வரும். முதல் ஐந்து நிமிடங்களுக்காயினும் பேனாவைக் கையில் எடுக்காதீர்கள். பதட்

## உற்பத்தி தொழில் முயற்சி நிவாரணம்

(யாழ்ப்பாணம்)

உற்பத்திதிறன் வாய்ந்த தொழில் முயற்சிக்கான ஒன்றிணைக்கப்பட்ட நிவாரணத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நிவாரணப் பணம் கீழ்க் காணும் கிராமசேவையாளர் பிரிவுகளுக்கு மக்கள் வங்கி பிரதான வீதிக்கிளையில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8-00 மணிமுதல் 1-30 வரை வழங்கப்படும்.

கரம்பொன் கிழக்கு, எழுவைதீவு, சுருவில், நாரந்தனை, நாரந்தனை வடக்கு, கரம்பொன், காரைநகர் கிழக்கு, காரைநகர் தெற்கு, கொக்குவில் மேற்கு.

குறிப்பிட்ட பகுதியைச் சேர்ந்தவர்கள் அவ்வவ்பகுதி கிராமசேவையாளர்களுடன் தொடர்பு கொண்டு வங்கி இலக்கத்தைப்பெற்றுவருமாறு வேண்டப்படுகின்றார்கள அதுடன் முன்பு திகதி குறிக்கப்பட்டு ஆயிரம் ரூபா நிவாரணம் பெறாத ஊர்காவற்றுறை, மண்டைதீவு, காரைநகர் பகுதியைச் சேர்ந்தவர்களும் அன்று வந்து தங்களது நிவாரணப்பணத்தைப் பெறுமாறு வேண்டப்படுகின்றனர்.

## வரதனே வைதீஸ்வரனே!

ஏழைத் தருமிக்கு ஏதமிலாப் பாட்டெழுதி
வாழ வழிவகுத்த வைத்தீசா!—நாளடைவில்
நந்தமிழர் தங்களுக்கே நாளும் அருள்புரிதல்
உந்தனுக் கிங்கெளிதோ சொல்

★

நெடிதுயர் மதில்கள் ஓங்கும்
நிகரிலா யாழ்ப்பா ணத்தில்
வடிவொளிர் வண்ணை மேவும்
வரதனே வைத்தீஸ் வரனே
அடிமுடி காண வொட்டா
அம்பலத் தரசே! இந்தப்
படியுறை தமிழ ருய்யப்
பாலிப்பாய் அருளை யீசா!

— கவியரசு வெண்பாமணி முருககூரியன்

(இன்று வண்ணை வைத்தீஸ்வரன் கோயில் 4-ம் திருவிழா)

## பலதும் பத்தும்

### ஒரு வினாவின் கதை!

22-3-90 ல் மக்கள் கருத்துப் பகுதியில் 'பாடத் திட்டம் முடியாமல் பரீட்சையா?' என்ற குமுறல் வெளிவந்ததல்லவா!

இதனைப் பார்த்த பெற்றார் ஒருவர் நேரே வந்துவிட்டார். சற்றுக் கடுகடுப்போடு, கையில் ஓர் வினாப் பத்திரத்தோடு!

''உட்காருங்கள்!'' ஆசுவாசப்படுத்தக் கையாண்ட வழி!

''இருக்க வரவில்லை; இதனைப் பாருங்கள்!''—அவ்வளவு கொதிப்பு. வினாத்தாள் கைமாறுகின்றது.

''நன்றாகத்தானே உள்ளது; நல்ல கேள்விகள்; அழகான அச்சுப் பதிவு!'— இது பளல்;

''உங்களுக்கென்ன தெரியும்......கேள்விகள் பற்றி... பாடசாலைகள் பற்றி...!''- எனக்குள் ஒரு நமட்டுச் சிரிப்பு!

''பாடத் திட்டம் முடியவில்லை; பரவாயில்லை; சில பகுதிகளை நானே சொல்லிக் கொடுத்தேன். ஆனால் கேள்விகள் அப்பாலும் சென்றுவிட்டதே!''

கதைச் சுருக்கம் இது: ஆண்டு9-சைவசமயம்-பாடநூலில் இருப்பது 29 அலகுகள்-முதலாந் தவணையில் முதற் 10 அலகுகள் படிப்பித்திருக்கலாம்—ஆனால் இரண்டாம் பகுதியின் கட்டாயக் கேள்வியும், இன்னோர் கேள்வியும் 15ம், 16ம் அலகுகளில் வந்துள்ளனவே]

அவர் சொன்ன அதிர்ச்சித் தகவல்: இந்தப் பாடங்களிற கேள்விகள் வரும் எனச் சில மாணக்கருக்குத் மூன்னமே தெரிந்ததாம்.

சமய பாடத்திற்கும் கீழ் வகுப்புகளில் டியூசன்; வினா வங்கிகள் பாதுகாப்பாக இல்லை; மேற்கே பார்க்கிறோம்!

வாணி

# முறைசாராக் கல்வியின் புதிய பயிற்சி நெறிகள்

(யாழ்ப்பாணம்)

முறைசாராக் கல்வியின் புதிய பயிற்சி நெறிகளின் கீழ் படகுகளுக்கான வெளிஇயந்திரம் திருத்துதல், தென்னந்தும்புத் தொழில் ஆகியன அறிமுகப்படுத்தப்படுகின்றன

படகுகளுக்கான வெளி இயந்திரம் திருத்துதல், மருதங்கேணி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையிலும், தென்னந்தும்புத் தொழில், குடத்தனை அமெரிக்க மிஷன் பாடசாலையிலும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

விண்ணப்பித்தவர்களும், புதிதாக இக் கல்வித் திட்டத்தில் சேர விரும்புவோரும் ஏப்ரல் மாதம் 1ம் திகதி சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்களோடு தொடர்பு கொண்டு நேர்முகப்பரீட்சைக்கு வருமாறு யாழ் முறைசாராக் கல்விப் பிரிவு கேட்டுள்ளது. (152)

# "தமிழ் எங்கு வாழ்கிறதோ சைவமும் அங்கு வாழும்"

- செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

(யாழ்ப்பாணம்)

"எமது முன்னோர் சைவமும், தமிழும் வேறுனதென்று கருதியதில்லை; எங்கு தமிழ் வாழ்கிறதோ அங்கு சைவமும் வாழும்- வாழ்வின் நோக்கமே சைவ நெறியில் தலைப்பட்டு, வாழ்வதுதான் என்று அவர்கள் எண்ணினுர்கள். செயற்பட்டார்கள். அதனுலேதான் அன்று உலகில் அமைதி நிலவியது. சமாதானம் நிலைத்தது. ஒருவரை ஒருவர் ஒழித்திட வேண்டுமென்ற உட்பகை, வன்செயல் தலைதூக்கவில்லை. வாழ வேண்டுமென்ற உயர்ந்த குறிக்கோளுடன் அன்றைய தமிழர் வாழ்வு மலர்ந்தது"

இவ்வாறு, ஏழாலை சைவ மகாஜன வித்தியாலயத்தின் பொன் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் சிவத் தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி குறிப்பிட்டார். கூட்டத்திற்கு வித்தியாலய அதிபரும், ஏழாலைக் கொத்தணிப் பாடசாலைகள் உதவி அதிபருமான திரு. வீ. த. திருநாவுக்கரசு தலைமை வகித்தார்.

மங்கள விளக்கேற்றி திருமுறை ஓதலின் பின் பொன் விழா நிகழ்ச்சியைக் குறிக்கும் பயன்தரும் மரங்களை நாட்டி வைப்பதில். பிரதம விருந்தினரும், சிறப்புவிருந்தினராகச் சமுகமளித்திருந்த மல்லாகம் கொத்தணி அதிபர் திரு. அ. மகாதேவனும் ஈடுபட்டிருந்தனர். வரவேற்புரையை வித்தியாலய ஆசிரியை திருமதி அம்பிகா சிவசுப்பிரமணியம் நிகழ்த்தினுர்

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தொடர்ந்து உரையாற்றுகையில், சீர்காழியில் ஞானப்பாலுண்ட திருஞானசம்பந்தப் பெருமான் "ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே சூழ்க வையகமுந்துயர் தீர்கவே!" என்று அருளினுர். இன்று எமது முன்னைய தலைமுறையினரின் நற்ருெண்டுகளினுல், நாடெங்கணும் சைவப் பாடசாலைகள், கல்லூரிகள் மிளிர்கின்றன. அவை அந்நிய மத, கலாசாரத்திலிருந்து எமது மக்களைக் காக்கும் கேடயங்களாக உதவுகின்றன "என்ருர்.

அதிபர் திரு. வீ. த. திருவுக்கரசு தமது தலைமையுரையில்; "ஈழத்திலும், தமிழகத்திலும் சைவத்தையும், தமிழையும் வளர்த்த ஞானபரம்பரையினர் ஆசி இவ்வாலயத்திற்குண்டு. சேர். பொன் இராமநாதனின் மருகரான இலக்கிய கலாநிதி சு.நடேசபிள்ளையே இதன் தாபகர். இவ்வூர்ச் சைவப்பெருமக்கள் இவ்வித்தியாலயம் வளரத் தம்மை அர்ப்பணித்து வருகின்றனர்." என்ருர்

சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட மல்லாகம் கொத்தணிப் பாடசாலைகள் அதிபர் திரு. அ. மகாதேவன் "கல்வியை வளர்ப்பதற்குப் பதிலாக தம்மை வளர்க்க நினைக்கும் சில சுயநலவாதிகள் இன்று எம்மிடையே பிரதேச வேறுபாட்டைக் கிளறிவிட எண்ணுகின்றனர். இதனை எண்ணி நகைக்கவே தோன்றுகின்றது சூழலில் கல்வி பெற ஏழாலை சைவ மகாஜன வித்தியாலயம் தன்னை அர்ப்பணித்துள்ளது"என்ருர்.

மல்லாகம் கொத்தணிச் செயலாளர் திரு. சி. அருளையா உட்பட பரும் கூட்டத்தில் உரை நிகழ்த்தினர்.

# நூல் நிலைய வாசகர்கள் புகார்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பொது நூல் நிலையமும், வாசிகசாலையும் நண்பகல் 12 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரை மூடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வலி-தென் மேற்கு பிரதேச சபையின்விசேட ஆணையாளர் தமக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தின் பிரகாரம் குறிப்பிட்ட நேரத்தில் நூல் நிலையத்தையும் வாசிகசாலையையும் மூடவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாக பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

நண்பகல் நேரத்தில் தான் பண்டத்தரிப்பு சந்தைக்கு வரும் பெரும்பாலான வர்த்தகர்களும், பொதுமக்களும் வாசிகசாலைக்கு பத்திரிகை படிக்க வருவதாகவும் இவ்வாறு இந்த நேரத்தில் மூடப்படுவது வாசகர்களைப் பாதிப்பதாக இருப்பதாகவும் புகார் தெரிவிக்கப்படுகின்றது.

காலை எட்டு மணி தொடக்கம் மாலை ஆறு மணி வரை தொடர்ந்து திறக்கப்பட்டிருந்த இந்த நூல் நிலையமும், வாசிகசாலையும் நண்பகலில் முற்ருக மூடப்பட்டிருப்பது குறித்து வாசகர்களில் பலர் பண்டத்தரிப்பு உப-அலுவலகப் பொறுப்பதிகாரியிடம் புகார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை பண்டத்தரிப்பு பட்டின வரியிறுப்பாளர் சங்கத் தலைவர் திரு. ஏ. வி. துரையப்பா இந்த நூல் நிலையத்தையும், வாசிகசாலையையும் இரவு எட்டு மணி வரை திறந்து இயங்கச் செய்யுமாறு ஏற்கனவே கோரிக்கையொன்றைச் சமர்ப்பித்துள்ளது குறிப்பிடத்தக்கது. (72)

## பரீட்சைப் பூதமா?

(4ம் பக்கத் தொடர்ச்சி)

விடைத்தாள் திருத்துவோர் இரங்கிப் புள்ளி போட்டதாக நாம் கேள்விப்பட்டதில்லை.

பரீட்சை மண்டபத்திற்குப் போகு முன்பே 'இயற்கை உபாதை'களாற் பாதிக்கப்படாதிருக்கப் பார்த்துக் கொள்ளவேண்டும். பரீட்சை மண்டபத்தில் ஏதாவது இக்கட்டான நிலை ஏற்பட்டால் கூச்சமடையாது மேற்பார்வையாளரின் அனுமதி பெற்றுச் சென்று வாருங்கள்.

பரீட்சையைக் கண்டு பயப்படாதீர்கள்; அந்தப் பூதம் உங்கள் வழிக்கு வந்துவிடும்!

## பரிபாலன சபை கூடுகிறது

(மட்டுவில்)

விளைவேலி மருதடி வீரகத்தி விநாயகர் தேவஸ்தான பரிபாலனசபையின் வருடாந்தப் பொதுக்கூட்டம், சபைத் தலைவர் பண்டிதர் த. தம்பிராஜா தலைமையில் 25ம் திகதி நடைபெறும். (82)

## விபத்து

மாதகலில் இடம்பெற்ற மோட்டார்சைக்கிள் விபத்தில் ஒரு சிறுமி படுகாயமடைந்தார்.

மாதகல் சுகமன்துறையைச் சேர்ந்த கவிதா ஞானப்பிரகாசம் (வயது 7) என்ற சிறுமியே படுகாயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

0 0 0 0

நீர்வேலி அச்செழுவில் நேற்று இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தொன்றில் சிறுமி ஒருத்தி படுகாயமடைந்தார்.

அச்செழு சியாமினி பரஞ்சோதிராசா (வயது 05) என்ற சிறுமியே படுகாயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (56)

## ரூ.4000 நிவாரண கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை இலங்கை வங்கியில் சுயதொழில் பாதிப்புக்கான ஊக்குவிப்புப் பணம் 4,000 ரூபா கீழ் குறிப்பிட்ட கிராமசேவகர் பிரிவுகளுக்கு வழங்கப்படும். நிவாரணத்திற்குரியவர்கள் தத்தம்கிராம சேவை அலுவலகருடன் தொடர்பு கொண்டு வங்கிக்குச் சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இன்று 24-ம் திகதி நகுலேஸ்வரம், துர்க்காபுரம், காங்கேசன்துறை தெற்கு, தெல்லிப்பழை வடமேற்கு, தெல்லிப்பழை, பன்னுலை, மாவிட்டபுரம், கொல்லங்கலட்டி, வீமன்காமம், கட்டுவன், மயிலிட்டி தெற்கு, குரும்பசிட்டி, வயாவிளான், மயிலிட்டி வடக்கு, மயிலிட்டி துறை, பலாலி கிழக்கு, பலாலி மேற்கு கிராமசேவகர் பிரிவுகள்' நாளை 25-ம் திகதி அளவெட்டி வடக்கு, தையிட்டி, காங்கேசன்துறை வடக்கு, அளவெட்டி தெற்கு கிராமசேவகர் பிரிவுகள்: மேல் குறிப்பிட்ட திகதிகளில் நிவாரணப் பணம் பெருதவர்களின் பெயர்ப் பட்டியல் யாழ்ப்பாணம் கச்சேரிக்குத் திருப்பி அனுப்பப்படும் என்று வங்கி அறிவித்துள்ளது.

## மாநகரசபை ஊழியர் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

"நீரழிவு, அதி இரத்த அழுத்தம், இருதய நோய், தாய் சேய் நலன், வாய்ப் புற்றுநோய், முரசு வியாதி, சமூக சுகாதாரப் பிரச்சனைகள் சம்பந்தமான (நாற்பது வயதுக்கு மேற்பட்ட) மாநகர சபை ஊழியர்களுக்கு எதிர் வரும் 30ம் திகதி கருத்தரங்கு ஒன்று நடைபெறும் என்று யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. வி. பாலசிங்கம் தெரிவித்தார்.

"எமது ஊழியர்களை அன்று பரிசோதனைக்குட்படுத்தி சம்பந்தப்பட்டவர்களுக்கு வியாதிகள் இருந்தால் வைத்திய வசதிகள் அளிக்கவும் எண்ணியுள்ளோம்" என்றும் அவர் கூறினுர்.

கருத்தரங்கில் வைத்தியக் கலாநிதி திரு. ந. கனகசபை தொடக்கவுரை நிகழ்த்துவார். யாழ்ப்பாணம், கோப்பாய், மானிப்பாய் ஆஸ்பத்திரிகளில் கடமை பார்க்குப் சுகாதார வைத்திய அதிகாரிகளும் பங்குபற்றுவார்கள். (152)

# பெண்களின் வாழ்க்கைநிலை

## மகளிர் முன்னணி நடவடிக்கை

(புங்குடுதீவு)

தீவகமெங்கும் உள்ள பல கிராமங்களுக்கும் நாங்கள் விஜயம்செய்து அங்குள்ள பெண்கள் எப்படியான வாழ்க்கையை நடத்தி வருகின்ருர்கள். அவர்களின் தேவைகள் என்ன என்பதை அறிந்து வருகின்ருேம். கடந்த காலங்களில் இராணுவத்தினரால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு முற்போக்கான வேலைத்திட்டங்கள் மூலமாக வாழ்க்கையை வளம்படுத்திக் கொடுக்க முன்வந்துள்ளோம்

இவ்வாறு புங்குடுதீவு மாங்காடு சர்வோதய மண்டபத்தில் நடைபெற்ற மகளிர் கருத்தரங்கில் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் தீவுப்பகுதி மகளிர் முன்னணியைச்சேர்ந்த செல்வி சோபிகா குறிப்பிட்டார்.

இக்கருத்தரங்கில் மகளிர் முன்னணிக்கு பின் வரும் கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

"இப்பகுதிக்கு தரமான பயிற்சிபெற்ற சிறுவர்பாடசாலை ஆசிரியர் ஒருவர் நியமனம் செய்யப்படவேண்டும். நிரந்தரமான பாடசாலை அமைக்கப்பட்டால் எல்லா பெற்றேரும் தத்தமது பிள்ளைகளை ஒழுங்காக இங்கு அனுப்புவார்கள்.

தும்புத்தொழிற்சாலைஒன்று இங்கு உள்ளது. ஆனுலும் பல உபகரணங்கள் இல்லாதகாரணத்தினுல் சரிவர இயங்கமுடியாதிருக்கிறது அதற்கானஉபகரணங்கள் வழங்கப்பட வேண்டும். (101)

# தொண்டர் ஆசிரியர்களை இடைநிறுத்தம் செய்ய வேண்டாம்!

## அமைச்சுச் செயலாளர் பணிப்புரை

(உடுவில்)

"தொண்டர் ஆசிரியர்களை சேவையிலிருந்து திடீரென இடைநிறுத்தம் செய்ய வேண்டாம்" என்று கல்வி ராஜாங்க அமைச்சின் செயலாளர்திருமதி தி காரியவாசம் பணித்துள்ளார்.

பாடசாலைகளில் சேவையில் உள்ள தொண்டர் ஆசிரியர்களை நிரந்தரமாக நியமிக்க கல்வி அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இக் காலப்பகுதிக்குள் தொண்டர் ஆசிரியர்கள் சேவையிலிருந்து திடீரென இடைநிறுத்தம் செய்வதை தவிர்த்துக் கொள்ள வேண்டும். தொண்டர் ஆசிரியர்களை சேவையில் அமர்த்தியுள்ள பாடசாலைகள் பல அவர்களைசேவையிலிருந்து நிறுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுத்துள்ளதாக முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. தொண்டர் ஆசிரியர்களை சேவையில் இருந்து இடைநிறுத்தம் செய்ய வேண்டாம் என்று கல்வித் திணைக்களங்கள் மூலமாக பாடசாலை அதிபருக்கு திருமதி தி. காரியவாசம் பணிப்புரை விடுத்துள்ளார். 109

## வீரவேங்கை நினைவாக மைதானம்

(மட்டுவில்)

வீரவேங்கை பொன்னம்பலம் நினைவாக கரபந்தாட்ட விளையாட்டு மைதானம் ஒன்று சிரமதானத்தின்மூலம் கல்வயல் பகுதி இளைஞர்களால் வயலில் அமைக்கப்பட்டுள்ளது.

வீரவேங்கை பொன்னம்பலம், 1986ம் ஆண்டு மட்டக்களப்பில் இலங்கை இராணுவத்துடனுன நேரடி மோதலல் வீரமரணமடைந்தவராகும். இவரின் நினைவாக கல்வயலில் ஒரு வீதியும் 1986ம் ஆண்டு மார்ச் மாதத்தில் திறக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. 82

# புத்தாண்டு போட்டி

(மட்டுவில்)

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் தென்மராட்சி கலை,கலாசாரக் குழுவினரும், மாணவர் இயக்கமும் இணைந்து புத்தாண்டுப் போட்டிகளை ஏற்பாடுசெய்துள்ளனர்.

கவிதை, கட்டுரை, சித்திரம் சுவரொட்டிகள். (கேலிச் சித்திரங்கள் போன்ற போட்டிகளுடன் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டிகளும் இடம் பெறும்.

மரதன் ஓட்டம் (ஆண்கள் 10 மைல் பெண்கள் 5 மைல்), தலையணைச்சண்டை, தடைதாண்டி ஓட்டம், தேங்காய் உடைத்தல், முட்டி உடைத்தல், சறுக்கு மரம் ஏறல். ஆகியவையும் சைக்கிள் ஓட்டம் (ஆண்கள் 60 மைல், பெண் 20 மைல்) விநோத உடைப்போட்டி, கரபந்தாட்டம், உதைபந்தாட்டம் ஆகிய போட்டிகளும் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கவிதை கட்டுரை போட்டிகளில் பங்குபற்றுவோர், விடுதலைப்புலிகளின் போராட்ட வரலாற்றில், இராணுவ அரசியல், பொருளாதார. கல்வி, சுகாதார, சாதிக் கட்டமைப்பு போன்ற அம் ங்கள் பொதிந்தனவாக அமைதல் வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (82)

# புத்தூர் கொத்தணி 8 பாடசாலையில் உடற்கல்வி, பாடத்துறை ஆசிரியர்இல்லை

[அச்சுவேலி]

"புத்தூர் கொத்தணிப் பாடசாலை அமைப்பில் இடம் பெற்றுள்ள எட்டுப் பாடசாலை ஒன்றில்கூட உடற்கல்வி பாடத்துறை ஆசிரியர் இல்லை. இக்குறைபாட்டை கல்வித் திணைக்களம் உடனடியாகப் போக்குவதற்கு ஆவன செய்யவேண்டும்."

இவ்வாறு புத்தூர் கொத்தணிப் பாடசாலையின் புதிய அதிபராக நியமிக்கப்பட்டுள்ள திரு. வி. சந்திரசேகரம் பிள்ளை. யாழ். மாவட்ட கல்வித் திணைக்களம், மருதனமடம் கோட்டக்கல்வி வலய கல்வி அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்த கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார், (74)

## வரணி வடிசாலை

(யாழ்ப்பாணம்)

வரணி வடிசாலை இயங்கத் தொடங்கியுள்ளது இவ்வடிசாலையை பச்சிலைப்பள்ளி, கொடிகாமம் தெங்கு பனம் பொருள் விற்பனவு கூட்டுறவுச் சங்கங்கள் நிர்வகித்துவருகின்றன. (152)

# தேசிய சேமிப்பு வங்கியின் புதியகிளைகள் திறக்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

''ஏப்ரல் முதலாம் வாரமளவில் தேசிய சேமிப்புவங்கியின் சுன்னுகம், சாவகச்சேரி கிளைகளைத் திறப்பதற்குரிய ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்றன. இந்தத் திறப்பு விழாவில் தலைமைஅலுவலகத்திலிருந்து தலைவர், பொது முகாமையாளர் கலந்து கொள்ளவுள்ளனர். புதிய கிளைகள் திறக்கப்பட்டதும் யாழ். தேசிய சேமிப்பு வங்கியில் கணக்கு வைப்பவர்கள், அந்தந்தப் பிரதேச கிளைகளுக்கு கணக்குகளை மாற்றிக்கொள்ளலாம்.

இவ்வாறு தேசிய சேமிப்பு வங்கி யாழ். பிராந்தியமுகாமையாளர் திரு, சிவபாலகணேசன் தெரிவித்தார்.

அவர் மேலும் தகவல் தருகையில், சங்கானை, காங்கேசன்துறை, ஊர்காவற்றுறை, அச்சுவேலி போன்ற இடங்களிலும் புதிதாகக் கிளைகள் திறப்பதற்கேற்ற நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறோம். யாழ். பிரதேச மக்கள் தேசிய சேமிப்பு வங்கியின் ஓய்வூதியத் திட்டம், அறக்கொடைத் திட்டங்களிலுள்ள பயன்களை முழுமையாகப் பெற்றுப் பயன்பெறவேண்டுமென்றும் முகாமையாளர் கூறினர்.

## மத்தியஸ்தர் பரீட்சை தமிழில்

[மானிப்பாய்]

ஸ்ரீ லங்கா வலைபந்தாட்ட சம்மேளனம் நடத்தவிருக்கும் மத்தியஸ்தர் பரீட்சையை வடக்கு கிழக்கு மாகாணத்தில் தமிழ் மொழியில் நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கான உரிய ஒழுங்குகளை செய்யுமாறு வடக்கு கிழக்கு மாகாண வலைபந்தாட்ட இணைப்பதிகாரிகள் விளையாட்டு அதிகாரி செல்வி ந. யசோதாவை கேட்டுக்கொண்டதற்கிணங்க விண்ணப்பம் கோரப்படும் நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

பயிற்சி பெறவிரும்புவோர் விளையாட்டு அதிகாரி உதவி அரசாங்க அதிபர் பணிமனை நல்லூர் என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர். [71]

## ஆசிரியர் பற்றுக்குறை

(உடுவில்)

''எமது கல்லூரி திறம்பட இயங்குவதற்கு தடையாக உள்ளது ஆசிரிய பற்றுக்குறையாகும். நல்ல சேவை மனப்பான்மையும் திறமையுமுள்ள ஆசிரியர்களை கல்விப்பகுதியினர் எமக்கு கொடுத்து உதவ வேண்டும் என்று மானிப்பாய் மகளிர் கல்லூரி அதிபர் திருமதி எஸ். கல்யாணசுந்தரேசன் கல்லூரியில் நடைபெற்ற பரிசளிப்பு வைபவத்தில் உரையாற்றுகையில் கூறினுர்,

# மன்னார் நீதிமன்று ஆரம்பம் விசாரணைகள் இல்லை

(மன்னார்)

மன்னார் நீதிமன்றம் ஆரம்பிக்கப்பட்டது. ஆனல் எவ்வித வழக்கு விசாரணைகளும் நடைபெறவில்லை. அலுவலக ஊழியர்கள் மட்டும் வருகை தந்து பதிவு செய்து விட்டு செல்கின்றுர்கள். புதிய மாவட்ட நீதிபதியாக திருமதி ஏ. அருச்சுனு நியமனம் பெற்றுள்ளார். இதேவேளையில் பதிவாளராகக் கடமையாற்றிய திரு கே. பெரியதம்பி 1-ம் திகதி முதல் தற்காலிகமாக கொழும்பு அப்பீல் நீதிமன்றத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## பதவி உயர்வு

(உடுவில்)

மருதனுமடம் கோட்டக் கல்வி அலுவலகத்தில் புதிய கல்வி அதிகாரியாக புத்தூர் சோமாஸ்கந்தாக் கல்லூரி அதிபருமான திரு. நா, கணேசபிள்ளை பதவி உயர்வுடன் நியமனம் பெற்றுள்ளார். (109)

## உங்கள் பிரச்சனை என்ன?

கேள்வி: நான் ஓர் சீவல் தொழிலாளி. தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்கத்தில் இன்னும் அங்கத்தவராகச் சேரவில்லை. சேர்ந்தால் நன்மைகள் உண்டா?

க. சின்னராசா - சாவகச்சேரி.

பதில்: நீங்கள் இத் தொழில் பார்த்தால், கட்டாயம் சங்கத்தில் அங்கத்துவம் பெற வேண்டும். நீங்கள் அங்கத்துவம் பெற்ற சங்கம், சமாஜத்திலும் அங்கம் பெற்றிருந்தால் விபத்துநிதி போன்ற சலுகைகள் கிடைக்கும்.

எதிர்பாராத விதமாக தொழில் பார்க்கும் போது விபத்து ஏற்பட்டால் உங்கள் பிற்கால வாழ்க்கைக்கு ஒரு தொகையைத் தருவார்கள். விபத்துக்குழு பார்வையிட்டு, கூட்டுறவு உதவி ஆணையாளரின் சிபார்சின் படி இத்தொகை வழங்கப்படும். (152)

## கூட்டுறவுத்துறை புனரமைப்பு

(மானிப்பாய்)

கூட்டுறவுத் துறையைப் புனரமைப்பதற்கு வடக்கு-கிழக்கு மாகாண அரசு தீர்மானித்துள்ளதைத் தொடர்ந்து நாலு கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்யட்பட்டுள்ளது.

இந்நிதியை ஆசிய அபிவிருத்தி வங்கி, மத்திய புனர்வாழ்வு, ராஜாங்க அமைச்சினூடாகவும், மாகாண அமைச்சினூடாகவும் வழங்கியுள்ளது. (71)

# ரூ.5லட்சம் கொள்ளைமுயற்சி முறியடிப்பு!

(கொழும்பு)

கொழும்பு பெரிய ஆஸ்பத்திரியிலிருந்து ஐந்து லட்சம் ரூபாவை கொள்ளையடித்துச் செல்ல முயன்ற ஆயுதம்தாங்கிய இருவர் இடைநடுவில் பொலிஸாரினுல் மடக்கி பிடிக்கப்பட்டனர்.

மேற்படி ஆஸ்பத்திரி ஊழியர்களுக்கு வழங்கப்படவென்று கொண்டுவரப்பட்ட ஐந்து லட்சம் ரூபாவையும், மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் கொள்ளையடித்துக் கொண்டு தப்பியோட முயன்ற வேளையில் மோட்டார் சைக்கிள் திடீரென்று இயங்காமல் நின்றுவிட்டது. இதனையடுத்து ஆஸ்பத்திரி ஊழியர்கள் பொலிஸாருக்கு தகவல் கொடுத்ததும், பொலிஸ் கோஷ்டி இவர்களை மடக்கி பிடித்ததுடன், இவர்களிடமிருந்து துப்பாக்கிகளும், ரொக்கப்பணமும் கைப்பற்றப்பட்டன. (அ)

## நிரந்தர கட்டடம்

(பண்டத்தரிப்பு)

அளவெட்டி அரசினர் மருந்தகத்திற்கு புதிய நிரந்தரக் கட்டடம் விரைவில் நிறுவப்படவுள்ளது.

யாழ். பிரதேச சுகாதார சேவைப்பணிப்பாளர் டாக்டர் என். கனகசபை மேற்கொண்ட முயற்சியினுல் இதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (72)

## கடைகள் திங்கட்கிழமை மூடப்படும்

(மட்டுவில்)

சாவகச்சேரியில் பிரதி ஞாயிற்றுக்கிழமைகள் தோறும் அரைநேரமும், திட்கட்கிழமைகள் தோறும் முழுநேரமும் கடைகளை பூட்டுவது என்று சாவகச்சேரி வர்த்தகர் சங்கம் ஏகமனதாகத் தீர்மானித்துள்ளது.

சாவகச்சேரி வர்த்தக சங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட இந்தத் தீர்மானம் இம் மாதம் 25ம் திகதி முதல் நடைமுறைக்கு வருமென சாவகச்சேரி வர்த்தகர் சங்கம் அறிவித்துள்ளது. (82)

## நடமாடும் பற்சிகிச்சை நிலையம்

(கொக்குவில்)

மாணவர் சுகாதார கல்விச் சேவைத் திட்டத்தின்படி நடமாடும் பற்சிகிச்சை நிலையத்தைச் செயற்படுத்த சுகாதாரப் பகுதியினர் முன்வந்துள்ளனர்.

இதனுல் கொக்குவில் கொத்தணிக்குள் அடங்கும் கொக்குவில் மேற்கு ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலை, உயரப்புலம் தமிழ் மகாவித்தியாலயம், கொக்குவில் மேற்கு சி. கி. ரி. எம். பாடசாலையில் உள்ள 13 வயதிற்குட்டட்ட சுமார் 700 மாணவர்கள் பயனடைவார்கள் என்று ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலை அதிபர் திரு கே. கணேசதாசன் அறிவித்தார். (135)

# சிங்கள பொலிஸார் இரத்ததானம்!

(வடமராட்சி)

பொலிஸ் தினத்தை முன்னிட்டு ஐந்து சிங்களப் பொலிஸார் வடமராட்சியில் இரத்ததானம் செய்துள்ளனர்.

நேற்று நாடெங்கிலும் கொண்டாடப்பட்ட பொலிஸ் தினத்தை முன்னிட்டு பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த நிலையப் பொறுப்பதிகாரி அமரசிங்க உதவிப் பொலிஸ்பரிசோதகர் ஜெயநாயக்க இருவரதும் தலைமையில் பொலிஸ் உத்தியோகத்தர்களான குணதிலக, தயாரத்தின, விஜயவீர யுயன்கொட பண்டார ஆகியோர் மந்திகை ஆஸ்பத்திரியில் இரத்ததானம் வழங்கினர். (51)

# கிருஷ்ணபுரத்தில் மலேரியாவுக்கு நால்வர் பலி 500 பேர் கிசிச்சைபெற்றனர்

(கிளிநொச்சி)

கிருஷ்ணபுரம் கிராமசேவையாளர் பிரிவில் மலேரியா நோய்க்கு நால்வர் பலியாகியுள்ளனர். இதனையடுத்து கிருஷ்ணபுரம் கிராம முன்னேற்றச் சங்சம் சுகாதாரப் பகுதியினருடன் தொடர்பு கொண்டு எடுத்த நடவடிக்கையின் பயனுக மலேரியா தடை சம்பந்தமான வேலைகள் இப்பகுதியில் ஆரம்பமாகியுள்ளன.

அண்மைக் காலங்களில் சுமார் ஐநூறு பேருக்கு மேல் இப்பகுதியில் மலேரியா நோய் ஏற்பட்டுச் சிகிச்சை பெற்றுள்ளதாகவும் இப்பகுதியில் வசிப்பவர்கள் மிகவும் வறியமக்களாகையால் சுகாதார வசதியின்றிக் கொடிய நோய்களுக்கும் ஆளாகிவருகின்றனர் என்றும் கூறப்படுகிறது.

யுனிசெப், கே. டி. ஆர். ஆர் ஓ, பிரஜைகள் குழு, செஞ்சிலுவைச் சங்கம், சுகாதாரப் பகுதியினர் ஆகியவை இலவசமாக மல, சல கூடங்களை அமைத்துத் தரவேண்டும் என்று கிராம முன்னேற்றச் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. (83)

## வவுனிக்குளத்தில் சிறுபோக நெற்செய்கை

(அச்சுவேலி)

பல வருட இடைவெளிக்குப் பின்னர் இந்த வருடம் வவுனிக்குளம் நீர்ப்பாசனப் பிராந்தியத்தில் சிறுபோக நெற்பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

கடந்த காலங்களில் போதியளவு நீர் வசதி இன்மையால் வவுனிசகுளத்தில் நீர்ப்பாசனம் செய்யப்பட்டு, விவசாயம் செய்யும் பகுதிகளில் சிறுபோக நெற்செய்கை நடைபெறவில்லை.

இந்த வருடம் அண்மையில் பெய்த மழையினுல் வவுனிக்குளத்தில் கணிசமான அளவு நீர் நிறைந்திருப்பதால் அந்தப் பகுதியில் உள்ள விவசாயிகள் பங்கீட்டு அடிப்படையில் ½ ஏக்கர் வீதம் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

## கட்டாக்காலி நாய்கள் அழிப்பு

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு சந்தைப் பகுதியிலும், அரசினர் கிராமிய வைத்தியசாலையிலும் நீண்ட காலமாகப் பொதுமக்களுக்கு உபத்திரவமாக இருந்துவந்த கட்டாக்காலி நாய்கள் கொல்லப்பட்டன.

பண்டத்தரிப்பு பொது சுகாதாரப் பரிசோதகர் திரு. பொ. பேரின்பநாதன் மேற்கொண்ட முயற்சியினுல் இப்பகுதியிலுள்ள சுமார் முப்பது கட்டாக்காலி நாய்கள் பிடிக்கப்பட்டுக் கொல்லப்பட்டன. (72)

## உபகரணங்கள் அன்பளிப்பு

(உடுவில்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் முறைசாராக் கல்வி பயிலும் மாணவர்களின் நன்மை கருதி ஐக்கிய நாடுகள் அகதிகள் உயர் ஸ்தானிகராலயமும் கல்வி அமைச்சும் இணைந்து சுமார் ஐந்தரை லட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்களை வழங்கியுள்ளன,

இவ்வுபகரணங்களை பயன்படுத்தி மின்சார இணைப்பு, ஹோட்டல் முகாமைத்துவம், இலத்திரணியல், தட்டச்சுப் பாடம் ஆகியவற்றை பயில வசதிகள் செய்யப்படும் (109)

## வருடாந்த கூட்டம்

(மட்டுவில்)

விளைவேலி மருதடி வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம் பரிபாலனசபையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை பிற்பகல் தேவஸ்தான முன்றலில் சபைத் தலைவர் பண்டிதர் த. தம்பிராஜா தலைமையில் நடைபெறும். (82)

## அன்னை பூபதிக்கு அஞ்சலி

[நெல்லியடி]

தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் நெல்லியடிப் பிரதேசத்தினரால் நெல்லியடியிலும் அன்னை பூபதியின் ஞாபகார்த்த நிகழ்ச்சிகள் கொண்டாடப்படுகின்றன.

நெல்லியடி பஸ்நிலையத்தின் முன்பாக அன்னை பூபதியின் உருவப்படம் வைக்கப்பட்டு அதனைச்சூழ அலங்கரிக்கப்பட்டுள்ளது. சோககீதமும் ஒலிபரப்பப்பட்டது. [55]

## இராசி பலன்

24 - 03 - 1990

சனிக்கிழமை

மேடம்: எதிர்பார்த்த வெற்றி, தொழில் பாராட்டு, கடன் வரவு, குடும்ப மகிழ்ச்சி, புதிய உறவு.

இடபம்: தொழில் லாபம், வேலையால் சகாயம், குடும்ப ஒற்றுமை, பதிய சிந்தனை, பகைவர் தொல்லை.

மிதுனம்: கடன் தொல்லை, பண்புகெட்ட செயல், தொழில் சிறப்பு. அரசாங்க பயமுறுத்தல்

கடகம்: குளப்பமடைதல், பழைய பகைமை, ஆரோக்கியக் குறைவு, குடும்ப ச் சிக்கல்.

சிங்கம்; எதிர்பாராத உதவி, அறிஞர் பாராட்டு, தொழில் சிறப்பு, பெண்வழித் தொல்லை.

கன்னி: தொழில் முயற்சி, உறவினர் வருகை, கடன் வசூல், மனைவியால் சந்தோஷம்.

துலாம்: மனப் போராட்டம், பயணங்சளால் அலைச்சல், தொழில் நஷ்டம், குடும்பப் பிரிவு.

விருச்சிகம்; துயரமான செய்தி, முதலீடு முடக்கம், ஆலய தரிசனம், குடும்பப் பிரிவு.

தனுசு: முக்கிய முடிவு, நண்பர் உதவி, அதிகாரிகள் பாராட்டு, அந்நியர் வருகை.

மகரம்: தொழில் பிரச்சனை, விரக்திநிலை, விவேகமற்ற முடிவு, குடும்பக் கவலை, சோம்பல்.

கும்பம்: அதிகாரம், புதிய பதவி, மனமகிழ்ச்சி. பண வரவு, காரிய சித்தி.

மீனம்: பயணம், தொழில் மூலமான செலவு, கருத்து மோதல், பணக் கஷ்டம். குடும்ப சந்தோஷம்.

# கஷ்டப் பிரதேச கல்வி பிரச்சனைகள்

## இன்றும் நாளையும் கருத்தரங்கு

[மருதங்கேணி]

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் ''இப்ரு'' ''பெஸ்'' ஆகியவற்றுடன் இணைந்து இரண்டு நாள் கருத்தரங்கை கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தில் இன்றும், நாளையும் நடாத்தவுள்ளது.

''கஷ்டப் பிரதேசக் கல்விப் பிரச்சனைகள்'' என்னும் விடயம் சம்பந்தமான கருத்தரங்கு நடைபெறவுள்ளது. கருத்தரங்கில் கலந்து கொள்பவர்களுக்கு உணவு, தங்குமிட வசதிகள் செய்யப்பட்டுள்ளன. கருத்தரங்கு சம்பந்தமான ஏற்பாடுகளை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க நிதிச் செயலாளர் திரு. என். சோதிநாதன் மேற்கொண்டுள்ளார். (53)

# ''மாணவரின் அடிப்படை வசதிகள் கவனிக்கப்பட வேண்டும்''

## தனியார் கல்வி நிறுவன ஒன்றியம் தீர்மானம்

[யாழ்ப்பாணம்]

தனியார் கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவர்களுக்கான அடிப்படை வசதிகள் யாவும் செய்து கொடுக்கப்படவேண்டும் என்றும், ஒரே மாதிரியான கட்டணமே சகல தனியார் கல்வி நிறுவனங்களிலும் அறவிடப்படவேண்டும் என்றும் தனியார் கல்வி நிறுவன ஒன்றியத்தின் பொதுச் சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

''பாடசாலை நாட்களாக கருதப்படும் வார நாட்களில் காலை வகுப்புகள் யாவும் காலை 5 45 மணி தொடங்கி காலை 7.30 மணி வரைக்கும் என்ற வரையறைக்கப்பாற்படலாகாது. [வார நாட்களில் காலை 7.30 மணி தொடங்கி 8 மணி வரையில் வகுப்புகள் எவையும் நடைபெறுதல் கூடாது.

'பகல் வகுப்புகள்' யாவும் பாடசாலை தொடங்கும் நேரத்தில் தொடங்கி பாடசாலை முடிவுறும் நேரத்தில் முடிக்கப்படுதல் வேண்டும். தற்போதைய பாடசாலை நேரத்தின்படி காலை 8 மணி தொடங்கி பிற்பகல் 2 மணி வரையிலேயே வகுப்புகள் நடத்தப்படல் வேண்டும். பாடசாலை நேரம் மாற்றப்படின் அதற்கேற்ப இந்நேர ஒழுங்கு மாற்றம் செய்யப்படலாம். மாலை வகுப்புகள் யாவும் மாலை 3 மணி தொடங்கி மாலை 6.30 மணி வரைக்கும் உட்பட்டதாய் அமைதல் வேண்டும்.

போயா போன்ற அரச விடுமுறை தினங்களில் பாடசாலை தவணை விடுமுறை தினங்களில், பாடசாலை மாணவர்களுக்கான வகுப்புகள் யாவும் காலை 5. 45 மணிக்கும் பிற்பகல் 6 30 மணிக்கும் உட்பட்ட காலப்பகுதியின் எவ்வேளையிலும் நடத்தப்படலாம்

### கட்டணங்கள்

க. பொ. த. உயர்தர வகுப்புகள் பகல் முழுநேர வகுப்பு நான்கு பாடங்களுக்குமான உச்ச மொத்தக் கட்டணம் ரூபா 120. தனித்தனிப் பாடங்களாக மாணவன் படிக்க விரும்பினால் பாடமொன்றுக்கு ரூபா 30 மட்டுமே அறவிடப்படுத்தல் வேண்டும்.

காலை, மாலை, வார இறுதி வகுப்பு நான்கு பாடங்களுக்குமான மொத்தக் கட்டணம் ரூபா 100. தனித்தனிப் பாடங்களாக மாணவன் படிக்கவிரும்பின் பாடமொன்றுக்கு ரூபா 25 மட்டுமே அறவிடப்படுதல் வேண்டும்.

வினு-விடை வகுப்பு வழமையான வகுப்புகளில் கலந்து கொள்ளும் மாணவர்கள் வினு விடை வகுப்புகளிலும் மேலதிகமாகக் கலந்து கொள்ள விரும்பின், அவர்களிடம் வழமையான வகுப்புகளுக்குரிய கட்டணத்தின் அரைவாசியே மேலதிகமாக அறவிடப்படல் வேண்டும். வழமையான வகுப்புகளில் கலந்து கொள்ளாமல் வினு-விடை வகுப்புகளில் மாத்திரம் கலந்து கொள்ளும் மாணவர்களிடம்இருந்து வினுவிடை வகுப்புக்குரிய முழுக் கட்டணத்தையும் அறவிடலாம்.

க. பொ. த. உயர்தர வகுப்பு மாணவர்களை தமது நிறுவனத்திலேயே நான்கு பாடங்களையும் கற்குமாறு நிர்ப்பந்திக்கலாகாது.

க. பொ. த. சாதாரணதர வகுப்பும் அதற்குட்பட்ட வகுப்புகளும் காலை, மாலை, வார இறுதி வகுப்புகள் யாதாயினும் 6 பாடங்களுக்குமான மொத்த உச்சக்கட்டணம் ரூபா 70. மேலதிகமாக நடைபெறும் ஒவ்வொரு பாடங்களுக்கும், ரூபா 10 மேலதிகமாக அறவிடப்படலாம். தனிப்பாடமொன்றிற்குரிய அதிக உச்சக்கட்டணம் ரூபா 15 ஆகும்.

பகல் முழுநேர வகுப்பு சகல பாடங்களுக்குமான உச்சக் கட்டணம் ரூபா 90.

குடிநீர் வசதி கழிப்பிட வசதி போன்றவை பிரதான மானவையாகும். ஒவ்வொரு வகுப்பிலும் இடநெருக்கடி ஏற்படாத வகையில், வகுப்பின் கொள்ளளவைப்பொறுத்தும், மாணவர்களின் பார்வைப் புலப் பிரதேசத்தையும் பொறுத்து மாணவர்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படல்வேண்டும்.

நாயகன்
இன்றைய நாயகன்!
தணிக்கை சபையால்
தடைப்பட்ட நாயகன்!!

ஹரன் திரையில்
4-வது வெற்றிவாரமாக
நாயகன்!!!
தினசரி: காலை 10-30,
2-30, மாலை 6-30
★ கமலஹாசன்
★ சரண்யா
★ ஜெனகராஜ்

நாயகன்
(கலர்)

# தற்கொலை

(யாழ்ப்பாணம்)

குடும்பத் தகராறு காரணமாக ஒருவர் கழுத்தில் சுருக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டார். யாழ்ப்பாணம் ஆரியகுளத்தடியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் பூநகரியைச் சேர்ந்த வல்லிபுரம் ஸ்ரீக்குமார் (வயது 26) என்பவரே தற்கொலை செய்து கொண்டவராவார்.

இச்சம்பவம் தொடர்பான மரணவிசாரணையில் இறந்தவரின் மனைவி சாட்சியமளிக்கையில் தனது கணவர் தினமும் தம்முடன் சண்டையிட்டு வந்ததாகவும், தினமும், தான் சாகப்போவதாகவும் கூறி வந்தார் என்று தெரிவித்தார்

விசாரணை முடிவில் தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. மரண விசாரணையினை யாழ். திடீர் மரண விசாரணை அதிகாரி எஸ். எஸ். பிரான்சிஸ் மேற்கொண்டார். யாழ். ஆஸ்பத்திரிப் பொலிஸ் உத்தியோகத்தர் ஆர். பகேந்திரராசா சாட்சிகளை நெறிப்படுத்தினர். (56)

# இன்றைய நிகழ்ச்சிகள்

(உடுவில்)

### தமிழ்த் தின போட்டிகள்

மருதனுமடம் கோட்டக் கல்வி அலுவலக தமிழ்த்தினப் போட்டிகள் இன்று சனிக்கிழமை உடுவில் மகளிர் கல்லூரி ல் நடைபெறுகின்றன.

இக்கோட்டத்துக் குட்பட்ட கொத்தணிப் பாடசாலைகளில் பங்குபற்றி முதலிடம் பெற்றவர்கள் இப்போட்டிகளில் பங்கு பற்ற தகுதி பெற்றுள்ளனர்.

### மானிப்பாய் மகளிர் கல்லூரி

மானிப்பாய் மகளிர் கல்லூரி பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் இன்று காலை கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். கல்லூரி அதிபர் திருமதி ச. கல்யாண சுந்தரேசன் கூட்டத்துக்கு தலைமை வகிப்பார்.

### ஆசிரியர் சங்கம்

வடமாகாண ஆசிரியர் சங்கத்தின் முப்பதாவது ஆண்டு வருடாந்த பொதுக்கூட்டம் இன்று காலை யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் நடைபெறுகின்றது. இக்கூட்டத்துக்கு திரு ப. சண்முகராசா தலைமை வகிப்பார்.

### சிவானந்த குருகுலம்

யாழ்ப்பாணம் சிவானந்த குருகுல பரிபாலன சபையின் வருடாந்த பொதுக்கூட்டம் இன்று பிற்பகல் குருகுல மண்டபத்தில் நடைபெறவுள்ளது

சிவானந்த குருகுலம் வருடாவருடம் நடத்திவரும் பாராட்டு. பரிசளிப்பு வைபவ ஒழுங்கில், இம்முறை கொழும்பு ஸ்ரீபொன்னம்பல வாணேஸ்வர சுவாமி தேவஸ்தான பிரதம குரு சிவஸ்ரீ குஞ்சிதபாதக்குருக்களை கௌரவித்து பாராட்டப்படுகிறுர்.

இவ்விழாவுக்கு யாழ் பல்கலைக்கழகபேராசிரியர் சிவஸ்ரீ கா. கைலாசநாதக்குருக்கள் தலைமை வகிப்பார்.

யாழ். வளாக இந்து நாகரிகத்துறை பேராசிரியர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன், சிவஸ்ரீ தா. மகாதேவக்குருக்கள், விரிவுரையாளர் திருமதி மங்கயர்க்கரசி திருச்சிற்றம்பலம் ஆகியோர் பாராட்டுரை வழங்குவர்.

சிவஸ்ரீ குஞ்சிதபாதக்குருக்களை பாரட்டி குருகுலத்தலைவர் சிவஸ்ரீ சுவாமிநாத இராஜேந்திர குருக்கள் கௌரவிப்பார். (109)

# மாரியம்மன் குளிர்த்தி

(மானிப்பாய்)

ஆனைக்கோட்டை மாரியம்மனின் குளிர்த்தி வைபவம் 26-ம் திகதி திங்கட்கிழமை நடைபெறவிள்ளது. (71)

# யாருடைய குடை?

கடந்த ஞாயிற்றுக்கிழமை திருநெல்வேலி தபால் பெட்டிச் சந்தியில் பலாலி றேட்டில் ஒருகுடையைக்கண்டு எடுத்து ஒரு அன்பர் 'ஈழநாடு' அலுவலகத்தில் ஒப்படைத்துளளார். உரியவர் அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக் கொள்ளவும்.

# அடிக்கடி இடம்மாறும் அஞ்சல் அலுவலகம்

[அச்சுவேலி]

''அச்சுவேலி அஞ்சல் அலுவலகத்திற்கு அச்சுவேலியிலுள்ள அரசாங்க நிலத்தில் நிரந்தரமான கட்டடம் அமைத்துக்கொடுக்க வேண்டும்'' என்று அச்சுவேலி பிரதேச அபிவிருத்திக்குழு, உதவி உள்ளூராட்சி ஆணையாளர் ஊடாக தபால் தொடர்புகள் அமைச்சரை மகஜர் மூலம் கேட்டுள்ளது.

அபிவிருத்திக்குழு அனுப்பி வைத்துள்ள மகஜரில் அச்சுவேலி அஞ்சல் அலுவலகத்திற்கு நிரந்தரமான கட்டடம் இல்லை. இதனுல் அஞ்சல் அலுவலகம் காலத்திற்குக் காலம் அடிக்கடி இடமாற்றப்பட்டு தனியார் கட்டடங்களில் செயற்பட்டு வருகின்றது. இதன் காரணமாக பொது மக்களும் அஞ்சல் அலுவலக அதிகாரிகள், ஊழியர்களும் பல்வேறு சிரமங்களை அனுபவிக்கின்றனர். இதனைக் கருத்தில் கொண்டு அச்சுவேலி மகாவித்தியாலய விளையாட்டுத் திடலுக்கு அருகிலுள்ள அரசாங்க நிலத்தில் நிரந்தரமான கட்டடம் அமைக்கப்படவேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளது [74]

# மண்ணின் மகுடம் அன்னைபூபதி!

உன்னைப் பசியில் உருக்கினுய்!
உயர்
உரிமைப் புயலைப் பெருக்கினுய்!
இந்த
மண்ணைக் கருவில் அடக்கினுய்!
இதை
மதியாப் பகையை மடக்கினுய்!
விண்ணைப் பிளந்து கிளம்பினுய்!
இனி
விடியல் வருமென விளம்பினுய்!
உயர்
பெண்ணைப் போல் நீ விளங்கினுய்!
நம்
இதயப் பேழையில் உறங்கினுய்!

—இளங்கம்பபாரதி

# சம்பியன்களாக தெரிவு

[மானிப்பாய்]

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கிடையே இடம்பெற்ற கரபந்தாட்ட, வலைப்பந்தாட்ட எல்லே போட்டிகளில் கரபந்தாட்டப் போட்டியில் பொற்பதி விளையாட்டுக்கழகமும், கலாமன்ற விளையாட்டுக் கழகமும் சாம்பியனுனது. வலைபந்தாட்டத்தில் அரியாலை இ. வி. கழகமும் எல்லேப் போட்டியில் கலாமன்ற விளையாட்டுக்கழகமும், கரபந்தாட்டம் பெண்கள் பிரிவில் கலைமகள் விளையாட்டுக்கழகமும் சம்பியனுனது. (71)

# விளையாட்டுக்கழகங்கள் நாளை மோதுகின்றன

(பண்டத்தரிப்பு)

விளையாட்டு அமைச்சின் ஆதரவில் சண்டிலிப்பாய் உதவி அரசாங்கஅதிபர் பிரிவு விளையாட்டுக் கழங்களுக்கிடையிலான வருடாந்த விளையாட்டுப்போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை மானிப்பாய் இந்துக்கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு. க. சிவசம்பு தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டியில் பிரதமஅதிதியாக மானிப்பாய் இந்துக்கல்லூரி அதிபர் திரு, செ. கேசவராஜன் கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினராக மாவட்ட விளையாட்டு அதிகாரி திரு. கே. ஏகாம்பரம் கலந்துகொள்வார். பரிசில்களை மானிப்பாய் மகளிர் கல்லூரி அதிபர் திருமதி எஸ். கல்யாணசுந்தரேசன் வழங்குவார். (72)

# கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் சட்டநாதர் ஆலயத்தில் புதிதாக தாம்பிரத்தினுல் உருவாக்கப்பட்ட அஷ்டபுஜ துர்க்காதேவி அம்பிகைக்கு நாளை ஞாயிற்றுக்கிழமை மஹா கும்பாபிஷேகம் நடைபெறும். (பூ)

# ரூ.1000 நிவாரண கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கி யாழ்ப்பாணம் 2வது கிளையிலும், நெல்லியடிக் கிளையிலும், பருத்தித்துறைக் கிளையிலும் கீழ்க் கண்டவாறு ரூ. 1000 நிவாரணப் பணம் வழங்கப்படும்.

இன்று 24ம் திகதி கரவெட்டி மேற்கு கிராம சேவைகர் பிரிவு- நெல்லியடிக்கிளை வங்கி, அல்வாய் மேற்கு- பருத்தித்துறைக் கிளை, துன்னாலை வடக்கு- பருத்தித்துறைக் கிளை, வண்ணார்பண்ணை வடக்கு, மேற்கு-யாழ். 2 வது கிளை.

25ம் திகதி நாளை கோண்டாவில் கிழக்கு- யாழ். 2 வது கிளை, புலோலி மேறகு- பருத்தித்துறைக் கிளை, அம்பன்- பருத்தித்துறைக் கிளை, கரணவாய் கிழக்கு- நெல்லியடிக் கிளை, கரணவாய் மேற்கு- நெல்லியடிக் கிளை, கரணவாய் மத்தி- நெல்லியடிக்கிளை.

மானிப்பாய்கிளை யூடாக வழங்கப்படும் மேற்படி நிவாரணம் ஆஸ்பத்திரி வீதி இலங்கை வங்கிக் கிளையில் வைத்து வழங்குவதற்கான நடவடிக்கைகள் தற்போது எடுக்கப்பட்டுள்ளன. இதன்படி கீழ்க் கண்ட கிராம சேவகர் பிரிவுகளுக்கு இந்த நிவாரணம் இலங்கை வங்கி ஆஸ்பத்திரிக் கிளை வீதியில் வழங்கப்படும்.


இன்று 24ம் திகதி மானிப்பாய்- ஆஸ்பத்திரிக்கிளை.

நாளை 25ம் திகதி சுதுமலை- ஆஸ்பத்திரிக் கிளை.

# அரசடி விநாயகர் ஆண்டு உற்சவம்

[பண்டத்தரிப்பு]

மானிப்பாய் மேற்கு கட்டுடை அரசடி விநாயகர் ஆலய வருடாந்த உற்சவம் இம்மாதம் 30-ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து உற்சவங்கள் நடைபெற்று அடுத்த மாதம் 7-ம் திகதி தேர் உற்சவமும் மறுநாள் தீர்த்த உற்சவமும் நடைபெறவுள்ளன. (72)



நேற்று ஆரம்பமான சென்றல்—சென். ஜோன்ஸ் கிரிக்கெட் போட்டியில் இரு கல்லூரி அணித் தலைவர்களும் 'பூவா-தலையா' போட்டுப்பார்ப்பதை முதல் படத்திலும், பிரதம அதிதியுடன் இரு கல்லூரி அதிபர்களும் விளையாட்டு வீரர்களும் 2-வது படத்திலும், ரசிகர் கூட்டத்தின் ஒரு பகுதியை 3-வது படத்திலும் காணலாம். (படங்கள்:- தேவா)

# வெற்றிப் பாதையில் சென்.ஜோன்ஸ் சாதனைவீரர் சுரேன்குமார் 137 ஓட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய கல்லூரியில் நேற்று ஆரம்பமான, 87-வது வருடாந்தக் கிரிக்கெட் போட்டியில், சென். ஜோன்ஸ் கல்லூரி வீரர் சுரேன்குமார் 1982 ம் ஆண்டு ஏற்படுத்திய சாதனையை தனது மின்னல் வேகத் துடுப்பாட்டத்தால் முறியடித்து புதிய சாதனையை ஏற்படுத்தினார்.

இவர் நேற்றைய ஆட்டம் முடிவடையும் போது ஆட்டம் இழக்காமல் 137 ஓட்டங்களை எடுத்து அதிசிறந்த வீரராகத் திகழ்ந்தார்.

நேற்றைய ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி, ஆரம்பக் கட்டத்தில் 4 விக்கெட்டுகளை இழந்து 35 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

இதன்பின் துடுப்பெடுத்தாடிய அணித்தலைவர் முகுந்தனும், பேனுட்ரமேஸும் சோடிசேர்ந்து சிறப்பாகஆடி ஓட்டங்களின் எண்ணிக்கையை 92 ஆக உயர்த்திய போது பேனுட ரமேஸ் 31 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

இதன்பின் ஸ்ரீசங்கர் அணித்தலைவருடன் சோடிசேர்ந்து ஆடினார். அணித்தலைவர் முகுந்தன் 27 ஓட்டங்களுடனும் ஸ்ரீசங்கர் 34 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

மதியபோசன இடைவேளையின் பிறகு யாழ். மத்திய கல்லூரி சகல விக்கெட்டுகளையும் இழந்து 156 ஓட்டங்களைப் பெற்றது சதீசன் 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

சென். ஜோன்ஸ் கல்லூரியின் ஆரம்பத் துடுப்பாட்டக்காரர்களான சுரேன்குமாரும், கஜேந்திரனும் மின்னல் வேகத்தில் ஓட்டங்களைப் பெற்ற வண்ணமிருந்தனர்.

தேனீர் இடைவேளையின் போது, சென். ஜோன்ஸ் கல்லூரி விக்கெட் இழப்பின்றி 106 ஓட்டங்களை எடுத்தது. அப்போது சுரேன்குமார் 65 ஓட்டங்களுடனும், கஜேந்திரன் 35 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது இருந்தனர்.

நேற்றைய ஆட்டம் முடிவடையும் போது, சென். ஜோன்ஸ் கல்லூரி 4 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 276 ஓட்டங்களைப் பெற்றனர்

சாதனைவீரர் சுரேன்குமார் ஆட்டமிழக்காமல் 137 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

இரண்டாம் நாள் ஆட்டம் இன்று காலை 9-30-க்கு ஆரம்பமாகும். (வி)

## ஆசிரியர்கள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ராக கல்வி அதிகாரி (திட்டமிடல்) திரு. கே. நடராஜமூர்த்தி நியமிக்கப்பட்டிருக்கிறார். ஆசிரியர் சங்கத்தின் பிரதிநிதிகளும் அதில் அங்கம் வகிப்பார்கள்.

வடக்கு-கிழக்கு பகுதிகளைச் சேர்ந்த ஆசிரியர்களின் மாகாண இடமாற்றங்கள் குறித்து இந்த சபை ஆராயும்.

## விமானங்கள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கட்சி உறுப்பினர் திரு டி. சேனநாயக்காவின் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் இவ்வாறு தெரிவித்தார்

அங்கு அவர் மேலும் பேசுகையில்; "இடம் பெயர்ந்தவர்கள் இலங்கைப் பிரசைகளாயின் அவர்களுக்கு அரசு, உணவு, உடை, புகலிடம் மற்றும் தேவையான உதவிகளை வழங்கும். இந்திய மத்திய அரசு, ஒரிஸாவிலுள்ள எமது நாட்டு அகதிகளின நலனுக்காகப் பணத்தை ஒதுக்கி உள்ளது. இலங்கையில் இருந்து அவர்களை ஓடுமாறு நாம் ஒரு போதும் கேட்கவில்லை" என்றார். (சி)

## ஒரிஸா

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

மணிநேரங்களின் பின் ஆயுதங்களுடன் பிடிபட்டனர் ஏனையோரைதேடி பெருமளவிலான 'பரா' துடுப்புகள் காடுகளில் பெரும் தேடுதல் நடத்தினர்.

அடுத்த ஓரிரு தினங்களில் மிகுதி அனைவரும் பிடிபட்டதாகவும் தற்போது அனைவரும் அகதிமுகாமில் பலத்த பாதுகாப்பின் மத்தியில் வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பிடிபட்ட பலரிடமிருந்து ஆயுதங்கள் மீட்கப்பட்டது தொடர்பாகவும் விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் ஏஜன்ஸி செய்திகள் தெரிவிக்கின்றன. (சி)

## திருமலை

(1ம பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருமான திரு. ரஞ்சன் விஜேரத்ன, உயர் கல்வி, விஞ்ஞான தொழில் நுட்பத்துறை அமைச்சர் ஜனாப் ஏ. சி. எஸ். ஹமீத் ஆகியோர் கலந்து கொள்வார்கள் என எதிர் பார்க்கப்படுகிறது.

## கலவப்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெறவிருக்கும் மாநாடு ஒன்றுக்கு வருமாறு பணிப்புரை வழங்கப்பட்டிருக்கிறது.

வடக்கு-கிழக்கு மாகாண அரசு கல்வி அமைச்சின் பதில் செயலாளர் திரு. ஈ. ஜே சற்குணராஜா மேறபடி பகுதிகளைச் சேர்ந்த கல்விப்பணிபாளர்கள் அனைவரையும் எதிர் வரும் திங்கட்கிழமை திருமலையில் நடைபெறவிருக்கும் மாநாட்டில கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுத்திருந்தார்.

சம்பந்தப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த கணக்காளர்களையும், பொறியியலாளர்களையும் அவர்களுடன் சேர்ந்து கலந்து கொள்ளுமாறும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

## விபத்து

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி இராமநாதபுரத்தில் நேற்று இடம்பெற்ற சைக்கிள் விபத்தொன்றில் இளம்பெண் ஒருவர் படுகாயமடைந்தார்.

இராமநாதபுரத்தைசேர்ந்த கமலாதேவி சாந்தலிங்கம் (வயது 30) என்ற பெண்மணியே படுகாயமடைந்தவராவார்.

இதே வேளை நீர்வேலியில் இடம்பெற்ற கார் விபத்தில் சிறுவன் ஒருவன் காயமடைந்தார்.

காயமடைந்த சின்னத்துரை குமரேந்திரன் (வயது 13) என்ற சிறுவன் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (56)

## இணைப் ।

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யாக முன்னாள் யாழ். அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா நியமிக்கப்பட்டிருக்கிறார்.

நேற்றைய தினம், திரு நேசையா திருமலைக்கு வந்து தமது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

## ஒன்பது பதில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

காணி விவசாய அமைச்சு: டாக்டர் என், விக்னராஜா.

உணவு, வர்த்தக, கடற்றொழில் அமைச்சு: திரு. எஸ். தில்லைநடராஜா.

திட்டமிடல இளைஞர் விவகார அமைச்சு: கலாநிதி செல்வி இராஜரத்தினம்.

போக்குவரத்துநெடுஞ்சாலைகள் அமைச்சு திரு. ரி. மார்க்கண்டு.

நீர்ப்பாசனம், வீடமைப்பு: திரு. கே. பரமானந்தம்.

சுகாதாரம்: டாக்டர் எம். இரத்தினசபாபதி.

## காஷ்மீர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

காஷ்மீர் பிரச்சனை தொடர்பாக பேச்சுவார்த்தைகள் இடம் பெறவேண்டும் என்று பாகிஸ்தான் பிரதமர் திருமதி பெனுசிர்பூட்டோ விடுத்துள்ள கோரிக்கையை இந்தியப் பிரதமர் திரு வி பி.சிங் நிராகரித்து மேற்கண்டவாறுகருத்துவெளியிட்டுள்ளார்.

நமீபியா சுதந்திரதினக் கொண்டாட்டங்களில் கலந்து கொண்டுவிட்டு தாயகம் திரும்பிய பிரதமர் வி பி சிங் பத்திரிகையாளாக்கு அளித்த பேட்டியில் மேலும் கூறியதாவது

காஷ்மீர் இந்தியாவின் இணைபிரியாத ஒரு மாநிலம, அங்கு வாழும் எமது சகோதரர்களுடன் பேச்சுநடத்தி பிரச்னைகளுக்கு தீர்வுகாண்போம், என்றார்.

## மத நிகழ்ச்சிகள்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணங்களிலிருந்து இந்திய அமைதிப் படை முற்றாக வெளியேறுவதையொட்டி, நாளை ஞாயிற்றுக்கிழமை, சகல பாடசாலைகளிலும் மத நிகழ்ச்சிகள் நடைபெறும் என்று கல்வி அமைச்சர் திரு லொக்கு பண்டார அறிவித்துள்ளார். (அ)

## சிங்கள அகதிகள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யில் தற்காலிகமாகத் தங்கி உள்ளனர்

இவர்களை மீண்டும் சொந்த இடங்களில் குடியமர்த்துவது தொடர்பாக விடுதலைப் புலிகளின் திருமலை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. ரூபனுடன் அரசு அதிகாரிகள் பேச்சுக்கள் நடத்தியுள்ளனர். இவர்களது விடயம் சுமுகமாகத் தீர்க்கப்படுமென திரு. ரூபன் அதிகாரிகளுக்கு தெரிவித்துள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது. (சி)

## மலேசியா

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சீட்டுக்களோ, விமானப்பிரயாணச் சீட்டுக்களோ இன்றி இருக்கிறார்கள்.

இது தொடர்பாக இலங்கை வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் "கொழும்பிலுள்ள உள்ளூர்முகவர்களைச் சந்தித்து சம்பந்தப்பட்டவர்கள் இவர்களை இலங்கைக்கு அழைப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுமாறு" உறவினர்களைக் கேட்டுள்ளது.

இதேவேளை மலேசியாவில் இலங்கையர் எவருக்கும் வேலையில்லையென்று மலேசியாவில் உள்ள இலங்கை உயர் ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது

## சமூக

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் தம் உரிமைககாகக் குரல் கொடுப்பது.

(3) சாதியத்திற்கும், பெண் ஒடுக்குமுறைக்கும், எதிராகச் செயற்படக்கூடிய வகையில் ஆக்கபூர்வமான திட்டங்களை முன்வைத்தல்.

(4) எமது வளங்களைப்பயன்படுத்தி எமது பொருளாதாரத்தை வளர்த்தெடுத்தல்.

(5) எமது சமூக வளர்ச்சிக்கான, பொருளாதார, கலை, கலாசாரஆய்வுகளைச்செய்தல்.

(6) எல்லா மட்டங்களிலும் மரபுவழிக் கலாசாரத்தைப் பேணிப் பாதுகாத்தல்.

(7) மக்களின் நல்வாழ்வுக்கு வழிகாட்டும் வண்ணம் கலை, இலக்கியப் படைப்புக்களை உருவாக்குதல்.

(8) மாணவர்களின் கல்விகளைச் சீரழியாமல் பார்த்துக் கொள்வதுடன் ஓர்புரட்சிகரக் கல்வித் திட்டத்தை மாணவர் முன்வைத்தல்.

(9) எமது மண்ணில் நடைபெற்ற, நடைபெறும் அத்துமீறிய குடியேற்றங்கள் குறித்துஆய்வு செய்து அதனால் ஏற்பட்ட, ஏற்படும்பாதிப் புக்களைக்குறித்து அறிக்கைசமர்ப்பித்தல்,

(10) தமிழ் – முஸ்லிம் மக்களின் நல்லுறவிற்காக உழைத்தல். (144)


## மரண அறிவித்தல்

பொன்னுத்துரை தருமகுலசிங்கம்



அளவெட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும், காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலைஊழியருமான, பொன்னுத்துரை, காலஞ்சென்ற மகேஸ்வரியின் செல்வப் புதல்வன் தருமகுலசிங்கம் 22-3-90 காலை அகால மரணமானார். அன்னாரின் இறுதிச் சடங்குகள் அளவெட்டி வடக்கு 'கருணுவாசா' இல்லத்தில் இன்று சனிக்கிழமை (24-3-90) பகல் 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மல்லாகம் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர்கள், நண்பர்கள், இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

பொன்னுத்துரை (தந்தை),
சகோதர, சகோதரிகள்.

கருணுவாசம்,
அளவெட்டி வடக்கு. (சி-3643)



இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990-ம் ஆண்டு பங்குனி மாதம் 24-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.